# நல்லதங்காள் கதை



சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு
கொழும்பு.

# புத்தக விளம்பரம்

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!

மாந்திரீகர்களுக்கு ஓர் அறிய பொக்கிஷம்

## கருவூரார் மாந்திரீக

# அட்டமாசித்து

வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆக்ருஷ்ணம், வித்துவேஷணம், பேதனம், மாரண முதலிய மூலமந்திரங்களும், தனித்தனி விநாயகர் பூஜை, சுப்பிரமணியர் பூஜை, வாலைபூஜை, வயிரவர் பூஜை, ஆஞ்சநேயர் பூஜை, தாமாவராகி பூஜை, மாடன்பூஜை முதலியனவுஞ் சேர்த்து அச்சிட்டிருக்கிறது. இதன் விலை அணா 12.

---

## சோதிட பிரஞ்ஞான தீபிகை

இதன் விலை ரூபா 4 0 0

இந்நூலானது லக்னமுதல் 12-பாவங்களுமுள்ள பலன்களைச் சோதிஷம் அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் எளிதில் விளக்கிக் காட்டக்கூடிய ஒரு வசன நூலாக இருக்கிறது. இந்நூல் ஒவ்வொரு மனிதரிடத்திலுமிருந்தால் அவரவர் வாழ்வு நாட்களில் வரும் நன்மை தீமைகளைச் சுலபமாய்ச் சோதிடர்கள் உதவியில்லாமலே அறிந்துகொள்ளலாம்.

---

## ஸ்ரீ பகவத்கீதை வசனம் கிளேஸ்

விலை ரூபா 5 0 0

ஸகலலோகரக்ஷகனான திருமால் தானே கிருஷ்ணனாக திருவவதாரஞ்செய்த காலத்தில் "தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய-ஸம்பவாமி யுகே யுகே" என்று சொல்லுகிறபடி அருச்சுனனை வியாஜமாகக்கொண்டு இம்மாநிலத்து மாந்தர்கள் அனைவரும் மகிழ்ந்து உய்யுமாறு வேதாந்தத்தின் ஸாரமாகிய இக் கீதாசாத்திரத்தை பரமகிருபையால் உபதேசித்திருக்கிறார். இக் கீதாசாத்திரத்திற்கு வடமொழியில் அநேகம் இருக்கிறது என்று யாவரும் அறிந்த விஷயமே. வடமொழியில் இருப்பதைச் சுத்தமாகத் தமிழ் வசனநடையில் ஸ்ரீ சங்கர பாஷியத்தைத் தழுவி சென்னை கிறித்தவ கலாசாலை மாஜி தமிழ்ப்பண்டிதர் T. . பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டு அழகிய இரண்டு படங்களும் சேர்த்து கடைசியில் தத்வ நாமங்களும் சேர்த்துள்ளன. ஆகையால் ஒவ்வொருவரும் தெய்வமகள் விலாச அச்சகத்தில் அச்சிட்டது என்று பார்த்து வாங்கக் கோருகிறேன். சொற்ப பிரதிகளே இருப்பதால் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள்.

ரப்பு விலை ரூபா 3 0 0

---

கிடைக்குமிடம்:—

## சரஸ்வதி புத்தகசாலை

நெம்பர்-175, செட்டியார் தெரு, கொழும்பு.

NALLATANGAL KADAI

உ

கடவுள் துணை

புகழேந்திப்புலவர் அருளிச்செய்த

பெரிய எழுத்து

# நல்லதங்காள் கதை

[ஐதிகப் படங்களுடன்]

by Puhalendi Pulavar




அச்சிட்டவர் — வெளியிட்டவர்,

அமரம்பேடு. குழந்தைவேல் முதலியார்

தெய்வமகள் விலாச அச்சுக்கூடததில

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு] 1957 [விலை அணா 8

24. தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

கிடைக்குமிடம் :—சரஸ்வதி புத்தகசாலை,

175, செட்டியார் தெரு, கொழும்பு.

# புத்தக விளம்பரங்கள்

அஷ்டாஷ்ட மூர்த்தங்களாகிய

## சிவபராக்கிரமம்

ஒப்புஒதி முதலீறில்லாத சிவபெருமான் தம் அடியார்க்கு அனுக்கிரகஞ்செய்யும் வண்ணஞ் சகளீகரித்த அறுபத்து நான்கு மூர்த்தங்களே சிவபராக்கிரமம் எனப்படும். இவ்வரிய நூலைச் சிறந்த செந்தமிழ் நடையில் செவ்வனே பயின்று பன்னூல்களை உரை எழுதியும், சில நூல்கள் மொழிபெயர்த்தும் விளங்கும். சென்னை கிறிஸ்டியன் காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும் சைவப் பிரசாரணருமாகிய ஈக்காடு இரத்தினவேலு முதலியார் அவர்களால் தமிழ் வசனநடையில் இயற்றி அவ்வவ் வற்புதங்களை நேரிற் கண்டனபோல் விளக்கத்தக்க திவ்ய திருவுருப்படங்கள் சிற்பநூல் விதிவழுவாது எழுதியமைத்து, முக்கியமான இடங்களில் வேதம், உபநிஷதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய பல வடநூல் மேற்கோள்களும் தமிழ்நூல் மேற்கோள்களும் காட்டி அச்சிட்டு அழகாகப் பயிண்டு செய்துள்ள இந்நூல் இன்றியமையாதது. இதிலுள்ள திருவுருவங்கள் பூசிக்கத்தக்கன. இதன் விலை ரூபா 4 0 0

---

## தேவார அடங்கன்முறை

(பண் அடைவு)

அனாதிமுத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று ஆன்மாக்கள் துணிந்து வழிபட்டு உய்யும்பொருட்டு பல அற்புதங்களினாலே சைவசமயத்தைத் தாபித்தருளிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் சமயாசாரியர்கள் மூவரால் அருளிச்செய்யப்பட்ட தமிழ் வேதமாகிய தேவாரம் ஒருலக்ஷத்திரண்டாயிரந் திருப்பதிகமுடையது. அவைகளுள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்களையும் திருவாரூர் அபயகுல சோழமகாராசாவினுடைய வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாருடைய மாணாக்கராகிய நம்பியாண்டார் நம்பி எழு திருமுறைகளாக வகுத்தருளினர். அவ்வேழும் அடங்கிய திருமுறை அடங்கன்முறை எனப்படும் புத்தகத்தை சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியரும் சித்தாந்தம் பத்திராசிரியருமாகிய திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் பல பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து செப்பஞ்செய்து சுத்தமாக நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டுத் தயாராயிருக்கின்றன.

இதன் விலை ரூபா 10 0 0

கிடைக்குமிடம் :—

**சரஸ்வதி புத்தகசாலை**

நெ. 175, செட்டியார் தெரு, கொழும்பு.

---

ஆசிரியர்:—காலஞ்சென்ற புகழேந்திப்புலவர். தொண்டைமண்டலத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான களத்தூர் கோட்டத்திலிருந்தவர்.




# நல்லதங்காள் கதை

## தோத்திரங்கள்

### விநாயகர் துதி கலிவிருத்தம்

இந்துவேணிய னீஸ்வரிபொற்பினில்
நந்துவாமிந்த நல்லதங்காள்கதை
முந்துசெந்தமிழ் மொழியவொருகொம்பு
சிந்துரம்மிரு சேவடிபோற்றியே.

### வெண்செந்துறை

வேழமுகத்தோனே விநாயகரேமுன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருமாள்மருகோனே
அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்றோனே
கரிமுகப்பிள்ளையாரே கணபதியேமுன்னடவாய்
பிரியமாய்நல்லதங்காள் பெண்ணின்கதைபாட
அறியாதான்நாவதனில் அன்பாய்வருவதற்கு
அரிதமுடனே துணையாகநீவருவாய்
தும்பிக்கையுள்ளவரே துன்பங்கள்வாராமல்
நம்பிக்கைவைத்தெந்தன் நாவிற்குடியிருந்து
ஆனைமுகப்பிள்ளையாரே ஐங்கரனேமுன்னடவாய்
பானைவயிற்றோனே பரமருடபுத்திரனே
பாடவேயெந்தனுக்குப் பகவானே அருள்புரிவாய்.

### சுப்பிரமணியர் துதி

திருத்தணிகைவேலவனே திருமால்மருகோனே
கருத்துவைத்துளந்தனை நீ காத்தருளவேணுமையா
வள்ளிமணவாளா மகேஸ்வரனார்புத்திரனே
புள்ளிமயிலேறும் புண்ணியப்போரூரா

நல்லதங்காள்கதையை நலமாகப்பாடுதற்கு
புல்லறிவன் என்னுவில் புண்ணியனே நீயிருந்து
கூடத்துணையிருந்து குற்றங்கள்வாராமல்
பாடத்துணையெனக்குப் பகவானேவாக்கருள்வாய்

## சரஸ்வதி துதி

தாமரைச்செங்கமலம் தன்னிற்பிறந்தவளே
கோமளசரஸ்வதியே கொம்பனையாள் நல்லதங்காள்
புண்ணியவதிகதையைப் புகழாகப்பாடுதற்கு
எண்ணியிருந்த எளியேனுடநாவில்
சொந்தமாய்ப்பாடுதற்குத் தோகையேயிப்போது
வந்துகுடியிருப்பாய் மிறையவனுர்தேவியரே
பூவிலுதித்ததொரு பொற்கொடியேயெந்தனுக்கு
நாவிற்குடியிருந்து நடத்தம்மா இக்கதையை.

## விநாயகர் துதி சந்தக்கலிவிருத்தம்

மஞ்சுகுழல்பிஞ்சுமுலை வஞ்சிநல்லதங்காள்
விஞ்சுவரலாறுசொல மிஞ்சுசிவனுர்முன்
கொஞ்சுமுலைமாதுதரு குஞ்சரகணேசன்
செஞ்சரணக்கஞ்சமல ரஞ்சலிசெய்வாமால்.

## கதைவரலாறு வெண்செந்துறை

திங்கள்மும்மாரிபெய்யும் சீரான நன்னுடு
எங்கும்மணிவிளையும் எழிலான நன்னுடு
செஞ்சாலிநெல்விளைந்து செழிக்கும்வளநாடு
தஞ்சலிறையாமல் தழைக்கும்மகாநாடு
நாற்றைப்பிடுங்கிப்பள்ளர் நன்றாய்நடுவார்கள்
சேற்றைக்குழப்பிப்பள்ளர் திறமாய்விடுவார்கள்
வயலிற்களைபிடுங்கி மாதர்கள்போடுவார்கள்
கயலென்றுதங்கள்கண்ணைக் கருதியேதேடுவார்கள்
தோள்மேலெடுப்பார்கள் சுமந்துநடப்பார்கள்
ஆள்மேலெடுப்பார்கள் அசைந்துநடப்பார்கள்
கார்நெல்லறுப்பார்கள் களத்தண்டைகொட்டுவார்கள்
வார்கொள்மாட்டைப்பிடித்துவந்துபிணைகட்டுவார்கள்
சாரிநெல்லுதிரும்படி சாய்ந்தேயுழுவார்கள்
இனிதானதொழில்களிலே எதும்வழுவார்கள்
ஏரடிக்கும்பண்ணையாட்கள் எங்குந்திரிவார்கள்
போரடித்துநெற்படுத்திப் பூசைபுரிவார்கள்
பூங்காவனப்பெருமைதனைப் புகலமுடிபோகாது

பூங்காவனப்பெருமை புகழத்தொடங்கினேன்காண்
துலங்கும்வாழைமரங்கள் இலங்கும்பலாமரங்கள்
குலுங்கும்பாக்குமரங்கள் நலங்கொள்தேக்குமரங்கள்
மாமரச்சோலைகளும் மருதிலுப்பைச்சாலைகளும்
தாமமிகுசந்தனமும் தவனமிகுநந்தவனமும்
தக்கசாமந்திகளும் சண்பகப்பூபந்திகளும்
மிக்ககுயில்பாட வீறுமயிலாட
ஆண்டிகள்தங்குமிடம் அரவிந்தம்பூத்தவிடம்
பாண்டியமகாநாட்டில் பாகமிகவுண்டென்று
முதியோரிளைஞரெல்லாம் முன்னுரைத்தசாஸ்திரத்தில்
மதுராபுரியென்று வாணர்முதல்சொல்லுவார்கள்
திக்கெட்டுமன்னர்புகழ் தென்மதுரைமாநகரம்
சூழ்வினைத்துன்பமெல்லாந் தொலைக்குந்திருநகரம்
வாழ்விக்கும்அட்டசெல்வம் மன்னுந்திருநகரம்
வானுளரிபிரமர் வந்திருக்குந்தன்நகரம்
மீனாக்ஷிமாதுமையாள் மேவுஞ்சீர்ப்பொன்னகரம்
உப்பரிகைமாளிகையும் உயர்ந்தபெருமாளிகையும்
செப்பரியமாடங்களும் சேர்ந்தசித்ரகூடங்களும் [ம்
செம்பொன்னாற்கோட்டைகளும்திகழரியபேட்டைகளு
அம்பொன்னாற்கோயில்களும் அழகானவாயில்களும்
முத்துச்சிவிகையேறும் முடிமன்னர்வீதிகளும்
தத்துபரியேறும் தடமன்னர்வீதிகளும்
வேல்கொடுக்கும்மன்னர்பலர் மேவிவாழ்வீதிகளும்
கோல்கொடுக்கும்வேளாளர் கூர்ந்துவாழ்வீதிகளும்
சாத்திரஞ்சொல்கின்ற சதுர்மறையோர்வீதிகளும்
காத்திரஞ்சேர்வாணிபஞ்செய் கனவணிகர்வீதிகளும்
கொட்டிதட்டிப்பணிகள்செய்யும் கொல்லர்வாழ்வீதிக
தட்டிப்பணிகள்செய்யும் தட்டாரவீதிகளும் [ளும்
பதினெட்டுசாதிவகை பலமன்னர்வீதிகளும்
துதிபெற்றமதுரையிலே சொல்லவுங்கூடாது
தராதலத்துமன்னர்களில் சந்திரகுலத்துதித்தோன்
நராதிபனும்ராமலிங்க நல்லமகாராசன்
மணிமகுடந்தாங்கி மனக்களிப்புமேலோங்கி
அணிமதுரைப்பட்டணத்தை அரசாக்ஷிசெய்யவென்று
செங்கோல்பிடித்துச் சிறப்போடரசுரிமை
தங்கமாமண்டலத்தை மனுநீதிதப்பாமல்
ஆறிலொருகடமை அரசனும்வாங்குவன்காண்

மாறியொருவருக்கும் வாக்குப்பிசகானே
இந்தப்புவிதனிலே இந்திராணியென்பவளைச்
சுந்தரமாய்த்தாலிகட்டி சுகிர்தமுடனரசில்
சிங்காதனமேறித் தேர்வேந்தன்வீற்றிருந்தான்
அங்காதனத்திருந்த ஆரணசாஸ்திரிமார்
வேதியரும்சோதிடரும் வேந்தன்முகம்பார்த்து
நீதியெடுத்து நிகழ்த்தலுற்றார்மன்னனுக்கு
ஓட்டுநவகோண மூலகாளுப்வேல்வேந்தே
பட்டந்தனக்குப்பிள்ளை பாராளவில்லையே
தங்களரசுரிமை தாளுளவில்லையே
எங்களரசனே யாங்களென்னசெய்வோமென்றார்
சொன்னமொழிகேட்டுத் தோன்றல்சினமடைந்து
தன்னரசுபட்டமாளத் தான்பிள்ளையில்லையென்று
எண்ணிவிசாரமுடன் ஏக்கமிகவடைந்து
மண்ணாளும்செங்கோல் மந்திரிதனக்கீந்து
மனைவிதனையழைத்து வன்காட்டிடஞ்சென்று
சுனையடர்ந்தமேருவிடந் தோன்றல்மனைவியுடன்
உலகாண்டதைமறந்து ஊமைமௌனியர்போல்
இலகுதிருநீற்றை எங்குமேதானணிந்து
சலியா துருத்திராட்சம் தானணிந்துமனைவியுடன்
பூலியாசனம்போட்டுப் பொற்பாயிருவரும்
புல்லும்படியமர்ந்து பூசைவழிபாடு
அல்லும்பகலுமாக ஆசையாலேசிவனை
மனத்திலிருத்தியே வந்தித்தார்சிந்தையுள்ளே
கனகவுமைமாது கண்டாளிவர்தபசை
பரமசிவனைநோக்கிப் பார்வதியாள்சொல்லுகிறாள்
வரமிகுந்தமாதேவா மாதவத்தைக்கண்டீரோ
பிள்ளைக்குவேண்டுகிற பெருந்தபசைப்பார்த்தீரோ
கொள்ளையிதுவரையிற் குவலயத்திற்கண்டறியோம்
தவசுக்குத்தான்மகிழ்ந்து தக்கமைந்தனைக்கொடுப்பீர்
எனறவள்கூறலுமே இசையுங்கருத்துடனே
சிவபெருமான்கண்டு சிந்தைமகிழ்ச்சிகொண்டு
எருதேறியிருவருமே ஏகாந்தமாகவந்தே
விருதுபெறமைந்தனை விரும்பிமிகக்கொடுத்தார் [ர்
பெண்ணொன்றுபிள்ளையொன்று பிறக்கும்படிகொடுத்தா
மண்ணரசன்மனைவியோடு மாதாவைத்தான்தொழுது
விமலனைப்போற்றிசெய்து வீடுவந்துதான்சேர்ந்தார்

தமக்கிரண்டாண்டுக்குள் தனயர்பிறந்திடவே
தக்கமைந்தனுக்கு நல்லதம்பியென்றுபெயருமிட்டு
ஒக்கநல்லதங்கையென உத்தமியைத்தாம்வளர்த்தார்
பள்ளிக்குவைத்தார்கள் பாலரிருவரையும்
தெள்ளுதமிழ்தெலுங்கும் தேர்ந்தேயுணர்ந்தார்கள்
வில்வித்தையானையேற்றம் மிக்ககுதிரையேற்றம்
கல்விப்பயிற்சியெல்லாம் கற்றுத்தெளிந்தார்கள்
மைந்தன்றனக்கு மணமுடிக்கவேண்டுமென்று
குந்தளதேசமாளும் கோமுகன்பெற்றெடுத்த
மூளியலங்காரி மொய்குழலாள் நாயகியை
நாளிட்டுக்கேட்டு நல்லமணமுடித்தார்
மணமுடித்தபத்தாநாள் மாதாஇறந்துவிட்டாள்
இணையிலிந்திராணிபோக இராமலிங்கராஜன்
மனைவியும்போனவுடன் மைந்தன்தனையழைத்து
தனயன்தனக்கரசைத் தானீய்ந்துசொல்லலுற்றான்
நல்லதம்பியிவ்வுலகை நானுண்டவாறுபோல
வல்லமுடிதரித்து மண்ணுலகில்மாந்தருக்கு
குறைவுகள்வாராமலே குடிகளனைவோர்க்கும்
நிறைசெங்கோல்கோணாது நீதிசெலுத்திடுவாய்
உந்தனுடன்பிறந்த உற்றநல்லதங்காளை
எந்நாளுமேபசுமை யெய்தியிருக்குமிடம்
ஆராய்ந்துபார்த்து அழகாய்மணமுடித்து
சீராகச்சீதனங்கள் சிந்தைமகிழ்ந்தேயீய்ந்து
அரசாட்சிசெம்மையுற ஆண்டிருப்பாயென்றுசொல்லி
பிறைமலர்க்கொன்றைப் பெம்மானையுள்ளிருத்தி
இராமலிங்கமன்னவனும் இறந்தவுடன் நல்லதம்பி
கருமாதிகாரியங்கள் கனமாய்முடித்தாச்சு
ஒருபோதும்பொல்லாங்கு உலகத்துக்கெய்தாமல்
தேசுபெறச்செங்கோல் செலுத்தியேவாழ்ந்திருக்க
காசிமகாராஜன் கனமதுரைவந்துசேர்ந்து
நல்லதம்பியைநோக்கி நல்லதங்காள் நாயகியை
வல்லமணம்செய்ய வார்த்தைமிகப்பேசி
பரியம்கொடுத்தானே பத்துலட்சம்பொன்னிதிகள்
பிரியமுடன்நல்லதம்பி பெண்கொடுக்கவேயிசைந்தான்

## திருக்கலியாணச் சிறப்பு

சார்ந்தால்சரிகுழலே சற்குணமேநல்லதங்காள்
நாளிட்டநாள்முகூர்த்தம் நாடெங்கும்தானறிய

கலியாணம்க்லியாணம் காரிகைக்குக்கலியாணம்
என்றைக்குக்கலியாணம் எங்களிளங்கொடிக்கு
சித்திரைமாசத்திலே செல்வக்கலியாணம்
கலியாணமென்றுசொல்லி கடலேறிப்பாக்குவைத்தார்
மாட்டின்மேல்பாக்குவைத்துமனிதர்க்குப்போகவிட்டா [ர்
சின்னமடிகோலிச் சீமையெங்கும்பாக்குவைத்தார்
பெரியமடிகோலிப் பூமியெங்கும்பாக்குவைத்தார்
பனையின்மரம்பிளந்து பந்தக்கால்செப்பனிட்டார்
தென்னமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசக்கால்செப்பனிட்டார்
மூத்துமரம்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
இட்டார்கள்பந்தலை இருபதுகாதவழி
தொட்டார்கள்பந்தலை தொண்ணூற்றுக்காதவழி
மூந்நூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலியைக் கழுத்திலேயென்றுரைத்தார்
தாலிதரிப்பதற்குத் தார்வேந்தனப்பொழுது
அஸ்தமிட்டமங்கிலியம் அவ்வரசன்தான்வாங்கி
அரகராவென்றுசொல்லி அணிந்தானேமங்கிலியம்
கன்னிதிருக்கழுத்தில் கட்டினான்மங்கிலியம்
மாதுதிருக்கழுத்தில் மங்கிலியஞ்சூட்டினானே
தாலிதரித்தபின்பு தார்வேந்தன்நல்லதம்பி
வந்தவுறன்முறைக்கு வழங்கினான்போஜனங்கள்
தாம்பூலம்புஷ்பமுதல் தான்கொடுத்தான்வந்தவர்க்கு
பந்தல்சபைதனிலே வந்தவர்கள்முன்பாக

## சீதனச் சிறப்பு

கலியாணவாசலிலே என்னென்னசீதனங்கள்
என்னென்னசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலிபேசாதே
பட்டிநிறைந்திருக்கும் பால்பசுவாஞ்சீதனங்கள்
ஏரிநிறைந்திருக்கும் எருமைகளாம்சீதனங்கள்
காடுநிறைந்திருக்கும் கறுப்பாடாஞ்சீதனங்கள்
மேட்டுக்கழனி மூலைக்கழனிசீதனங்கள்
பள்ளக்கழனி பயிர்க்கழனிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்

இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
சீதனங்களில்ஐயென்று சீர்குழலேயேசவேண்டாம்
வரிசைகளில்ஐயென்று வார்குழலேயேசவேண்டாம்
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
தோளுக்குத்தோளு துளசிபணிசீதனங்கள்
நெற்றிக்குச்சுட்டிசுட்டி நேர்விழிக்குமைகளுடன்
கையிற்சரிபவளங் கனகபணித்தாழ்வடங்கள்
மார்புசரப்பளியாம் வயிரபணிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்ஐயென்று சீர்குழலேயேசாதே
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
உட்கட்டுந்தாலி யுருக்குமணி ஆபரணம்
உட்கார்ந்துமோர்கடைய முக்காலிபொன்னாலே
சாந்திருந்துமோர்கடைய சாருமணைபொன்னாலே
பிடித்துப்பால்கறப்பதற்கு பிடிக்கயிறுபொன்னாலே
அணைத்திருந்துபால்கறக்க அணைக்கயிறுபொன்னாலே
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
ஆலாத்திபெண்களிலே ஆறுலட்சம்பெண்களுண்டு
பாக்குநறுக்கியிடும் பரிவாரமெத்தவுண்டு
வெற்றிலைச்சுருள்மடிக்கும்வெள்ளாட்டிபெண்களுண்டு
தெற்குத்தெருநிறைந்த தென்னமரஞ்சோலைகளாம்
வடக்குத்தெருநிறைந்த வாழைமரத்தோப்புகளாம்
கிழக்குத்தெருநிறைந்த இளமரங்கள்சீதனங்கள்
மேற்குத்தெருநிறைந்த விளாமரங்கள்சீதனங்கள்
குத்துஉலக்கைகள் கூடைமுறம்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்

## நல்லதங்காளும் காசிராஜனும் தங்கள் தேசம் போகுதல்

சீதனங்கள்தானகொடுத்து சிறப்பாகநல்லதம்பி
தங்கைமுகம்பார்த்து தாரவேந்தனே துரைப்பான்
ஏறுமம்மாதண்டிகையில் என்பிறவிநாயகமே
ஏறுமென்றுசொன்னவுடனிளங்கொடியுங்கண்சிவந்து
அடித்துப்புரண்டழுதாள் ஆபரணமற்றுவிழ
முட்டியழுதாளே முத்துப்பணியற்றுவிழ
கூட்டியழுதாளே கனகபணிகழன்றுவிழ
தாவியழுதாளே தலையணைமெத்தையிலே

அப்போது நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஏண்டியம்மாதங்கையுனக் கித்தனைகோபமென்ன
மதுரையறுகாதம் வாழ்மதுரைமூக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமூக்காதம்
நீ-நினைத்தபிரகாரம் நான்வருவேன் தங்கையென்றான்
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்
டோ, சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சி
யுண்டோ, பூவால்குறைச்சலுண்டோ பொற்கொடி நாய
ஏறுமம்மாதண்டிகையில் என்பிறவி நாயகமே [கமே
நீயேறும்தண்டிகைக்குமுன் தண்டி நம்மதென்றாள்
தாதியருமுன்னடக்கத் தாமமுடியாட்கு
தோழியருமுன்னடக்கத் தோகைமயிலாட்கு
பாங்கியர்கள்முன்னடக்கப் பாவையிளங்கொடிக்கு
பாவையர்கள்பின்னடக்கப் பத்தினியும்வழி நடந்தாள்
காலாளுஞ்சேவகரும் காவலரும்முன்னடக்க
கத்திகட்டுஞ்சேவகர்கள் கன்னடியர்முன்னடக்க
ஈட்டிபிடிமன்னர் இருபுறமுஞ்சூழ்ந்துவர
யானையுஞ்சேனையும் அத்தனையுமமுன்னடக்க
குதிரைபரிவாரம் கோடிதளம்பின்னடக்க
கட்டியங்கூறிவரக் கவிவாணர்பாடிவர
சிங்காரத்தேவதாசி தெருவில்நடம்புரிய
ஊர்வசிரம்பையைப்போல் உலாவி நடம்புரிய
புகுந்தாளரண்மனையில் புருஷனிணைபிரியாள்
எதிரொருவரில்லாமல் எல்லையரசாண்டிருந்தாள்
மற்றொருவரில்லாமல் மதுரையிலேவாழ்ந்திருந்தாள்
வாழுமபெருமைகளை வாக்குரைக்கக்கூடாது
வாழ்ந்திருக்கும்போதே மகாதேவர்தன்னருளால்
கிளிமொழிமாதுக்குக் கெர்ப்பமதுவுண்டாகி
ஏழுவருஷத்துக்குள் ஏழுபிள்ளைபெற்றெடுத்தாள் [ள்
பெற்றெடுத்த நல்லதங்கைபேருண்டாய்வாழ்ந்திருந்தா
வாழ்ந்திருக்கும்நாளையிலே வாழ்வரசிசீமையிலே

நல்லதங்காளுக்குப் பஞ்சகாலம் வந்தது

பன்னிரண்டொருவருஷம் பாரமழைபெய்யவில்லை
சிறுசம்பாபெருஞ்சம்பா சீரானசீரகச்சம்பா
காரநெல்லுகுண்டுசம்பா கம்புதினைகேழ்வரகு
துவரை அவரைகொள்ளு சோளம்நவதானியமும்



நாட்டில்மழையுமில்லை நல்லவிளைவுமில்லை
தேசஞ்செழிப்புமில்லை செந்நெல்விளைவுமில்லை
இப்படியாகப்பஞ்சம் நேர்ந்ததிளங்கொடிக்கு
வாராதபஞ்சமென்ன வந்ததிளங்கொடிக்கு
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததிங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
நாழியுருண்டபஞ்சம் நாயகனைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்துத் தனிவழியேநின்றபஞ்சம்
கூறைபறிகொடுத்து கொழுநனைத்தோற்றபஞ்சம்
கணவனைப்பறிகொடுத்து கைக்குழந்தைவிற்றபஞ்சம்
இப்படியாக இளங்கொடிக்குவந்திருக்க
இப்பெரியபஞ்சத்திலே ஆரணங்கேதுசெய்வாள்
தாலிதவிரவைத்துத் தங்கமெல்லாம்விற்றுவுண்டாள்
மாலைதவிரவைத்து மற்றதெல்லாம்விற்றுவுண்டாள்
ஆலாத்திப்பெண்களிலே ஆறுலட்சம்விற்றுவுண்டாள்
பாக்குநறுக்கியிடும் பணிப்பெண்ணை விற்றுவுண்டாள்
வெற்றிலைச்சுருள்மடிக்கும் மெல்லியரைவிற்றுவுண்டா[ள்
மாங்கள்முதலான துய்வந்தமட்டும்விற்றுவுண்டாள்
ருத்துமூலக்கைகளும் கூடைமுறம்விற்றுவுண்டாள்
அண்ணனுடசீதனங்களத்தனையும்விற்றுவுண்டாள்
தமையனுடசீதனத்தை தரணியில்விற்றுவுண்டாள்
தங்கப்பட்டணிதியெல்லாம் தவிட்டுக்குவிற்றுவுண்டாள்
இத்தனையுந்தான்விற்று ஏழையாய்நின்றாளே
தங்கப்பொருளைவிற்றுவுண்டு தாங்கமுடியாமல்
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றாள்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றாள்
பொறுக்கமுடியாமல் பிறந்திடத்தேபோறேனென்று
இப்படியாக இளங்கொடியாள்தானுரைத்தாள்
அப்போதுஆளன் ஆரணங்குக்கெடுத்துரைப்பான்
அடி-இப்போதுபோகிறது இனிதல்லவுத்தமியே
வாழ்ந்துகெட்டுப்போனாயானால் வலதுசிரிப்பாரடி
கெட்டுநொந்துபோனாயானால் கிளையிலுஞ்சேர்க்காரடி
கண்டார்சிரிப்பாரடி காசினியோரேசிடுவார்
பார்த்தார்நகைப்பாரடி பாரிலுள்ளோரேசிடுவார்
உடன்மனுத்தநாயகிமார் உகந்துசிரிப்பாரடி
வலதுக்கிடங்கொடாதே வார்குழலேநாயகமே

பெண்ணே நவமணியே புனக்கிளியேசொல்கிறேண்டி
ஆனாலும்பெண்மயிலே அருங்கிளியேநாயகமே
தாலிகட்டிக்கொண்டமுதல் தனிவழியேபோனதில்லை
மாலையிட்டுக்கொண்டமுதல் மறுத்துநாம்போனதில்லை
இப்போதுபோகிறது இனிநல்லவுத்தமியே [ல்
தண்டிக்குத்தண்டிபெண்ணே சரியாகவாழ்ந்தோமானு
வாவென்றழைப்பார்கள் வகையுண்டாய்பேசுவார்கள்
கெட்டமக்கள்போனாராகில் கிழிந்தகடுக்கிடுவார்
வாழ்ந்தமக்கள்போனாராகில் வண்ணத்தடுக்கிடுவார்
இப்போதுபோவதுனக் கியல்பல்லவுத்தமியே
பட்டணத்தில்புல்லுவிற்று பாலகனிரக்காத்திடுவோம்
இப்பெரியபட்டணத்தி லிருந்துபிழைத்திடுவோம்
சாணியெடுத்துவந்து தட்டிப்பிழைப்போமடி
கூலிபெடுத்தாகிலும கூடிப்பிழைப்போமடி
வேலிவிறகொடித்து விற்றுப்பிழைப்போமடி
இபபடியாய்கணவன் எடுத்துரைக்கும்வேளையிலே

நல்லதங்காள் புருஷன்சொல் தடுத்துத்
தாய்வீடு செல்லல

அப்போது நல்லதங்காள் ஆளனுக்கேதுசொல்வாள்
பூமுடிக்குங்கூந்தலிலே புல்லெடுக்கக்காரணமோ
வேர்முடிக்குங்கூந்தலிலே விறகெடுக்கனவிதியோ
சந்தனமிழைக்குங்கையால் சாணிதட்டக்காரணமோ
குங்குமமெடுக்குங்கையால் கூலிவேலைசெய்யலாமோ
ஆனைகட்டி எங்களண்ணன் அரசாளுகிறான்
குதிரைகட்டி எங்களண்ணன் குவலயத்தையாளுகிறான்
ஆளுகிறசீமையெல்லாம் அரண்மனைபோகவே
என-அண்ணனரண்மனைக்கு அரசாளப்போறேனென்
தமையனரண்மனைக்குத் தாய்வீடுபோறேனென்றாள்
அப்போது ஆளன அரிவையருக்கேதுரைப்பான
பேச்சுதனைக்கேளாமல் பெணமயிலேபோறாயோ
போகிறவிடந்தனிலே பிழைமோசம்வந்துவிடும
என்றதைக்கேட்டு எடுத்துரைப்பாள் நல்லதங்காள் [றாள
போங்காணும்பர்த்தாவேபோய்ப்பார்த்துவாறேனென்ன
புத்திரரை நான்வளர்த்து வருவேன்காண் புண்ணியரே
மைந்தரை நான்வளர்த்து வருவேன்காண் மன்னவரே
போய்ப்பிழைத்துவாறேனென்றுபொற்கொடி நமஸ்கரி
என்பேச்சுகேளாமல் ஏந்திழையேபோறாயோ [த்தாள்

கொண்டவன்வார்த்தைக்கு கோடுதவறாதே
ஆளன்சொல்தள்ளாதே அரும்பாவிசண்டாளி
புருஷன்சொல்தள்ளாதே பொல்லாதசண்டாளி
நீ-போனாலும்போறாயடி புத்திரர்பதனமடி
மைந்தர்களுக்குச்சேதம் வந்ததென்றுகேட்டேனானால்
நீ-ஈயாய்ப்பறந்தாலும் இருதுண்டாய்வெட்டிடுவேன்
காற்றாய்ப்பறந்தாலும் கண்டதுண்டம்செய்திடுவேன்
மக்கள்பதனமடி மங்கையரே நடவுமென்றான்
பிள்ளைகள்பதனமடி பெண்ணே நடவுமென்றான் [ள்
அப்போதுநல்லதங்காள் ஆளனுக்குத்தெண்டனிட்டா
போய்வாறேனென்று புருஷனுக்குத்தெண்டனிட்டாள்
தோளிலொருபிள்ளைவைத்தாள் தோகைமயிலனையாள்
பக்கத்திலபிள்ளைவைத்து கடுகவழிநடந்தாள் [தாள்
முதுகின்மேலபிள்ளைவைத்து மொய்குழலாள்தானடந்
பத்தினியும்முன்னடக்கப் பாத்தாவும்பின்னடக்க
இருவருமப்போது இசைந்துவழிநடந்து
பாப்பார்தெருகடந்து பாளையாவீதிவந்தார்
வன்னியர்தெருகடந்து வாபுரசாவீதிவந்தார்
செட்டிகதெருகடந்து சேணியனார்வீதிவந்தார்
வேளாளர்தெருகடந்து வேகமுடனுக
புலதெருவுங்கடந்து பக்ஷமுடனவாராரே
தேரோடும்வீதி தெருவீதிகோடியிலே

## நல்லதங்காளுக்கு அவசகுனம் நேரிடுதல

கன்னிகழியாப்பெண் கையில நெருப்பெடுத்தாள்
வாழாக்குமரியவள் மாளா நெருப்பெடுத்தாள் [யருட
வண்ணான்வெளுத்ததொரு புடைவைகண்டாள மங்கை
வாணியன்கூடையல்லோ வரக்கண்டாள்தனனெதிரே
ஓரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானான
சாரைகுறுக்காச்சு சர்ப்பமதடையாச்சு
காடையிடமாச்சு கருங்குறுமானகட்டாச்சு
பூனைகுறுக்காச்சு புதுப்பானைமூனாச்சு
அப்போதுதன்கணவ னரிவையருக்கேதுசொல்வான்
ஆகாச்சகுனம்பெண்ணே அடியெடுத்துவைக்காதே
பொல்லாச்சகுனம்பெண்ணே போகாதேபெண்மயிலே
குட்டியிட்டநாகேந்திரன் குறுக்கேயிடமாச்சு
என்றுமவனுரைக்க இவலான நல்லதங்காள்

ஆகாச்சகுனத்தை அறிந்துவரவேணுமென்ருள்
பொல்லாச்சகுனத்தை போய்பார்க்கவேணுமென்ருள்
போய்ப்பார்த்துவாரேனென்றுபூவைய்யுந்தெண்டனிட்
பதினெட்டுகாதவழிதூரம் பார்த்தாவும்வழிவிட்டான் [டாள்
மாதரைப்போகவிட்டு மன்னவனுந்திரும்பிவிட்டான்
அப்போது நல்லதங்காள் ஆரணங்குநடக்கலுற்ருள்
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனச்சாலைவிட்டு
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சம்வனந்தாண்டி [ம்
சுரைக்காய்காய்க்கும்வனம் சுண்டைக்காய்காய்க்கும்வன
கொஞ்சிப்பழுக்கும்வனம் குயிலினங்கள் தூங்கும்வனம்
சிங்கமுறங்கும்வனம் சிறுபுலிதூங்கும்வனம்
பேய்நுழையாக்கானகத்தில் போய்புகுந்தாள்கட்டழகி
வழியுந்தெரியாமல் கைதப்பிநின்றழுதாள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
மாமரத்தின்சோலையிலே மங்கையும்போயிருந்தாள்
பூமரத்தின்சோலையிலே பொற்கொடியும்வந்துநின்ருள்
மக்களைச்சூழவைத்து மங்கைபுலம்பலுற்ருள்
பிள்ளைகளைச்சூழவைத்துபெண்பெருமானழுகலுற்ருள்
மாமரத்தின்சோலையிலே மங்கையும்புலம்பலுற்ருள்
பிள்ளையழுகிறதும் பெண்ணுள்கலங்குறதும்
கன்னியழுகிறதும் காளையர்புலம்புவதும்
மக்களழுகிறதை மாமரமும்பார்த்தழுமாம்
பிள்ளையழுகிறதை பலாமரமும்பார்த்தழுமாம்
அத்துவானகானகத்தில் அழுதுபுலம்புகையில்
ஏழுபிள்ளை நல்லதங்காள் இருந்துபுலம்புகையில்
ஆனலழகுமன்னன் அண்ணன் நல்லதம்பியவன்
ஆண்டிருக்குமசீமையிலே அவனுடையமாளிகையில்

## நல்லதம்பி கனவு காண்கிறது

தூக்கம்வருகுதென்று தூங்குமஞ்சமெத்தையிலே
தங்கப்பொன்கட்டிலிலே தான்படுத்தான் நல்லதம்பி
சொர்னப்பொன்கட்டிலிலே தூங்குகின்றவேளையிலே
மனையிற்பிறந்தபெண்ணும் மாது நல்லதன்பிறவி
தாலிதரித்துக்கொண்டு தன்புருஷன்வீடுவந்து
நாற்பத்தொருவருஷம் நலமாகவாழ்ந்திருந்து
ஏழுபிள்ளைபெறறுமவள் இருக்கின்றவேளையிலே
பொல்லாதகாலமது சொல்லாமல்வந்ததுவாம்

பன்னிரண்டொருவருஷம் பஞ்சம்வந்துநேர்ந்ததுவி
தாலிகவிரமற்ற தங்கமெல்லாமுண்டபஞ்சம் [ம்
மங்கிலியந்தான் தவிர மற்றதெல்லாமுண்டபஞ்சம்
தாங்கமுடியாமல் தாய்வீடுவருவதுமாய்
வழிகள்தெரியாமல் வனத்தில்புலம்புவதாய்
காட்டிலேசப்தமிட காதிலேகேட்டதுபோல்
சொற்பனங்கண்டானே துரைமன்னன் நல்லதம்பி
ஒற்றைக்குரலுமென்ன ஒருத்தியழும்சப்தமென்ன
அத்துவானகானகத்தில் அழுகிருள்பெண்பெருமாள்
துங்கியெழுந்திருந்தான் தீயகனாக்கண்டதுபோல்
அலறியெழுந்திருந்தான் அல்லல்கனாக்கண்டதுபோல்
ஓங்கியெழுந்திருந்தான் ஓங்காரக்கோபமுடன்

## நல்லதம்பி காட்டில் வேட்டைக்கு வந்து தங்கையைக் காணல்

கச்சைவரிந்துகட்டிக் கருங்கச்சைதானணிந்து
வாளுருவிதோளில்வைத்து மன்னனெழுந்திருந்தான்
கருநாயுச்சங்கிலியும் கைக்கேற்ற அம்புகளும்
முள்ளிட்டவேலியெல்லாம் முருக்கம்பூவில்லுகளும்
சல்லிட்டநாயுடனே சகலகுணபாண்டியனும்
வெள்ளானைமேலேறி வேட்டைக்குவாரானங்கே
கருப்பானைமேலேறி காட்டுக்குவாரானங்கே
ஆனையின்மேலேறி அதிர்வேட்டைவாரானே
குதிரையின்மேலேறி குதிரைவேட்டைவாரானே
காட்டிலேவந்துமவன் கனவேட்டையாடுகையில்
வேட்டைகளாடிக் களைக்குமந்தவேளையிலே
ஆனைகுதிரையெல்லாம் அங்கங்கேதானிறுத்தி
குதிரைபரிவாரங் கோடிகளம்தானிறுத்தி
ஆணழகன் நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஆரடாசேவகரே அர்க்காருதம்பியரே
எவரடாகாவலரே இணைபிரியாமன்னவரே
அத்துவானகானகத்தில் ஆரோபுலம்புவது
ஆரோபுலம்புவது அறியவேவேணுமென்று
பூவையழுகிறதைப் போய்ப்பார்க்கவேணுமென்று
அப்போது நல்லதம்பி ஆணழகனேதுசெய்தான் [ன்
கருநாயைக்கைகொடுத்தான காவலரைப்போகவிட்டா
செந்நாயைக்கைகொடுத்தான் சேவகரைப்போகவிட்டான்

அருளருளுமென்னேயா அப்படியேநல்லதென்று
நல்லதம்பிதன்னுடனே நாலுலட்சம்சேவகர்கள்
காலாளுஞ்சேவகரும் கடுகெனவேஓடிவந்து
நல்லதங்காளருகில்வந்து நலமாகஅதுசொல்வார்
கானகத்தில்புலம்புகிற கட்டார்கருங்குழலே
வனத்தில்புலம்புகிற வனக்கிளியே நீயாரு
ஒண்டித்தனியாக ஒருமையாய்த்தானிருந்து
காட்டில்புலம்புகிற காரணத்தைச்சொல்லுமென்றார்

சேவகர்கள் காட்டில் நல்லதங்காளைக் கண்டு
அவர்கள் வரலாறு கேட்குதல்

எந்தவூர்தாயாரே எனக்கறியச்சொல்லுமென்றார்
காட்டிலேவந்துநீ கதறிப்புலம்புவதேன்
ஒண்டியாய்த்தானிருந்து ஓங்கியழுவதென்ன
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லுமென்றார்
அப்போது நல்லதங்கா ளர்க்காருக்கெடுத்துரைப்பாள்
ஊர்களும்பேர்களும் உங்களுக்குச்சொல்லணுமா
குலங்களைகேட்டுஅண்ணே பெண்கொள்ளவந்தாயடா
என்பாடுசொல்லவென்றால் நிலப்பாடுசாயுமடா
என்பாடுசொன்னுக்கால் எங்கும்நிலவெரிக்கும்
பெண்பாடுசொல்லவென்றால் பொழுதுவிடியுமண்ணே
என்றுசொல்லிநல்லதங்காளெடுத்துரைத்தாள்சேவகர்
அப்போதுகாவலர்க்கு அரிவையாள்கூறலுற்றாள் [க்கு
ஐந்துபிராயமண்ணே அறியாதநாளையிலே
தாயுந்தகப்பனும் செத்துமடிந்தபின்பு
குடுமிதலையுடனே கட்டிவிட்டமங்கிலியம்
பாவாடைகட்டவொண்ணுப் பதந்தெரியாநாளையிலே
சிற்றாடைகட்டவொண்ணுச் சீர்தெரியாநாளையிலே
கட்டிக்கொடுத்தாரண்ணே கடுகவந்தமன்னவர்க்கு
ஒப்பிக்கொடுத்தாரண்ணே உண்டானகாவலர்க்கு
தாலிதரித்தமுதல் தாய்வீடுபோனதில்லை
மாலையிட்டநாள்முதலாய் மற்றொருநாள்வந்ததில்லை
தான்போனநாள்முதலாய் நல்லமழையுமில்லை
பன்னிரண்டொருவருஷம் பாரமழைபெய்யவில்லை
நாற்பத்தொருவருஷம் நன்றாகவாழ்ந்திருந்தேன்
வாழும்பெருமையிலே மக்களைப்பெற்றெடுத்தேன்
ஏழுபேர்மக்களை யின்பமாய்ப்பெற்றெடுத்தேன்
பெற்றேனேமக்களை பேருண்டாய்வாழ்ந்திருந்தேன்

வளர்த்தேனேமக்களேவாழ்வுண்டாய்வாழ்ந்திருந்தேன்
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததங்கே
மரக்கால்லுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்துத் தனிவழியேநின்றபஞ்சம்
கூடைபறிகொடுத்துக் கொழுநனைத்தோற்றபஞ்சம்
தாலிதவிரவைத்துத் தங்கமெல்லாம்விற்றுவுண்டேன்
இத்தனையும்விற்றுவுண்டேன் தாங்கமுடியவில்லை
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றாள்
பொறுக்கமுடியாமல் பிறந்திடத்தேபோறேனென்றாள்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றாள்
என்றவுரைகேட்டு இயலானசேவகர்கள்
வந்ததுபோதுமம்மா மனக்கவலைதீர்ந்துவிடும்
சுகமாகத்தாய்பேரைச் சொல்லுமம்மா ஆரணங்கே
உன்பேரைநாங்கள்கேட்க உத்தமியேசொல்லுமம்மா
அப்போதுநல்லதங்காள் அரிவையுங்கூறலுற்றாள்
தாய்பேர்இந்திராணி தகப்பன்பேர்இராமலிங்கம்
என்பேர்நல்லதங்காள் எங்களண்ணன்பேர்நல்லதம்பி
என்றுமவளுரைக்க இயலானநல்லதம்பி

## நல்லதம்பி நல்லதங்காளைக் கண்டு பரிதவித்தல்

ஆனைவிட்டுத்தானும் அண்ணன்குதித்திறங்கி
குதிரையைவிட்டுத்தானும் கொப்பெனவேதானிறங்கி
கட்டியழுதானே கடலிறைந்தபாவனைபோல்
தாவியழுதானே தங்கைமடிமீதில்
கட்டியழுதமன்னன் களைதெளிந்தபிற்பாடு [ன
கண்ணாட்டிபெற்றசெல்வம் கால்நடையாய்வந்ததென்
கால்நடையாயிங்குவரக் காரணமென்னஎன்பிறப்பே
ஆனையரிதாச்சோ ஆண்டிருந்தசீமையிலே
குதிரையரிதாச்சோ குடியிருந்தசீமையிலே
ஒட்டையரிதாச்சோ உன்னுடையசீமையிலே
பல்லக்குபஞ்சமோதான் பத்தினியாளேறிவர
தண்டிகைக்கிட்டாதோ தாமமுடியாளே
பாங்கிமார்பஞ்சமோதான்பத்தினியேவுந்தனுக்கு[டோ
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்
சாலால்குறைச்சலுண்டோ சம்பந்தால்தாழ்ச்சியுண்
எத்தால்குறைச்சலம்மா என்பிறவியிங்குவர [டோ



ஓலைகிடையாதோ உத்தமனூர்சீமையிலே
ஓலையெழுதியல்லோ உத்தமியையனுப்பிவைத்தால்
ஓலைகண்டநாழிகையில் ஓடிவந்துபாரேனே
மதுரையறுகாதம் வாழ்மதுரைமூக்காதம்
தாயே-நீநினைத்தபிரகாரம் நான்வருவேன் தங்கையரே
கால்நடையாயிங்குவரக் காரணமென்னஎன்பிறப்பே
என்பிறப்பேவீட்டுக்கு ஏகுமம்மா நான்வருவேன்
பிள்ளைவிளையாடப் புள்ளிமான்கொண்டுவாரேன்
மைந்தர்விளையாட மான்வேட்டையாடிவாரேன்
தென்னண்டைவாடையிலே தேங்காய்குவித்திருக்கும்
வடவண்டைவாடையிலே மாங்காய்குவித்திருக்கும்
பிள்ளைகளும் நீயுமாய்ப் போடியம்மா தங்கையரே
உன்னைக்-கண்டவுடனவளும் கடுகச்சமைத்திடுவாள்
வீட்டுக்குப்போடியம்மா வேட்டையாடிவாரேனென்று
அப்போது நல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள் [ன்

## நல்லதம்பி நல்லதங்காளைத் தன் வீட்டுக்கனுப்பல்

அண்ணாவே அண்ணாவே ஆணழகாசொல்லுகிறேன்
வாசலறியேனப்பா வளவுகுறிப்பறியேன்
கோயிலறியேனப்பா குறிப்பறியேன்கொற்றவனே
அடையாளம்சொல்லுமென்று ளரிவையிளங்கொடியும்
மூன்றுகதவிருக்கும் மோதாங்கிபூட்டிருக்கும்
புறக்கடைவாசலிலே பொன்னின்கதவிருக்கும்
தலைக்கடைவாசலிலே தங்கக்கதவிருக்கும்
நாலுகதவிருக்கும் நாதாங்கிபூட்டிருக்கும்
காராம்பசுவுமுண்டு கட்டழகிவாசலிலே
காட்டானைவாசலிலே கட்டியிருக்குதம்மா
கந்துகமிரண்டுமங்கே கட்டியிருக்குதம்மா
அதுவே அடையாளம் அம்மணிபோகுமென்றான்
உத்தமியேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்
போடியம்மாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போது நல்லதங்கா ளரிவையருமேதுசொல்வாள்
அண்ணாவே அண்ணாவே ஆணழகாசொல்கிறேன்கேள்
மாதாஇருந்தாலும் வாவென்றுதானழைப்பாள்
தாயற்றபோதேயண்ணா தயவற்றுப்போகலையோ
அப்பனற்றபோதேயண்ணா ஆதாவுநானுமற்றேன்
மூளியலங்காரி முருகுழலாளண்ணியம்மாள்

வாவென் றழைப்பாளோ வரிசையிட்டுப்பார்ப்பாளோ
ஏனென் றுகேட்பாளோ ஏறமுகம்பார்ப்பாளோ
அண்ணரருகிருந்தா லருமைகள்மெத்தவுண்டு
என்பிறப்பே நீயிருந்தால் எனக்குமெத்தசொந்தமுண்டு
நீயில்லாமாளிகையில் நான்போகலாகாது
அண்ணனில்லாவீட்டிலடியெடுத்துவையேனென்றாள்
அந்தவுரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
தாயேஉனைவளர்த்த தாதியிருக்கலையா
அண்ணனிடபெண்சாதி ஆத்தாளிருக்கலையா [ன்
உடர்பிறப்பேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவே
போடியபமாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போதுநல்லதங்கா ளரிவைதுரிதமுடன்
நல்லதுயென்றுசொல்லி நடந்தாளே நாயகியாள்
காடுமலைதாண்டி கடுகவே நடக்கலுற்றாள்
பிள்ளைகளைப்பின்னடத்தி மாதாவும்போறாளே

மூளியலங்காரி நல்லதங்காள் வருவதைக்கண்டு
தன் ஆபரணமெல்லாம் பத்திரப்படுத்தல்

அப்போதுநல்லதம்பி ஆணழகன்தேவியரும்
உப்பரிகைமீதேறி உலாவுகையில்கண்டுவிட்டாள்
கண்டாளேகண்டாளே கண்ணாட்டிநாத்தியரை
கண்டுஇடிவிழுந்தாள் கட்டாணியப்போது
பார்த்துஇடிவிழுந்தாள் பாவியந்தசண்டாளி
தாதிகளைமூப்பிகளைத் தந்திரமாய்த்தானழைத்து
ஆடிதாதிகளே அரைக்ஷணத்தில் நீங்களிப்போ
தென்னண்டைமூலையிலே தேரோடும்வீதியிலே
வடவண்டைவீதியிலே வருகிறவளாரடிதான்
வருகிறவளாரடிதான் மாதரேபாருமென்றாள்
அப்போதுதாதியர்க ளரிவையர்களோடிவந்து
தெருவீதிதன்னில்வந்து சேடியரும்பார்க்கலுற்றார்
பார்த்துமேயோடிவந்து பாவையர்களேதுரைப்பார்
பனையிற்பிறந்தபெண்ணு மகாராசிவாராளம்மா
அப்போ-மூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
இவளிருக்குஞ்சீமையிலே இக்காலம்பஞ்சபண்டு
நானிருக்கும்சீமையிலே நாயகிஏன்வருவாள்
சீமைகளைப்பூமிகளைச் சீர்கொள்ளவாராளோ
என்வாழ்வைப்பறிக்கவல்லோ வாராளேசக்களத்தி

காடுகரைகளெல்லாங் கைக்கொள்ளவாராளோ
என்குடிக்குத்தீம்புவைக்க எங்கிருந்துவாராளடி
பொன்னுபரணமெல்லாம் போட்டழிக்கவாராளடி
தங்கப்பணிதியெல்லாம் தான்தரிக்கவாராளடி [விடு
தென்னண்டைக்கண்டீரானல் தெருக்கதவைச்சாத்தி
வடவண்டைக்கண்டீரானல் வலக்கதவைச்சாத்திவிடு
மூளிஅலங்காரி மூதேவிசொற்படிக்கு
தாதிகளப்போது சாத்திக்கதவடைத்தார்
இருத்திக்கதவடைத்தார் ஈரமண்போட்டடைத்தார்
பானையின்சாதமெல்லாம் பதனப்படுத்திவைத்தாள்
மூளியலங்காரி மூதேவிதுசெய்தாள் [ள்
பட்டைகழற்றிவைத்தாள் பாடகத்தைவாங்கிவைத்தா
சேலைகளைந்துமவள் சிலுவானப்பெட்டியில்வைத்தாள்
இட்டபணிதியெல்லாம் பெட்டியில்கழற்றிவைத்தாள்
பழந்துணிகந்தைகளைப் பாவியவள்கட்டிக்கொண்டா
முகத்திலேபற்றுமிட்டாள் மூதேவிசண்டாளி [ள்
தலையிலேபற்றுமிட்டாள்தரையிலேபள்ளிகொண்டாள்
வாசற்படியெதிரே மங்கையரும்பள்ளிகொண்டாள்

## நல்லதங்காள் அண்ணன்வீடு சேர்தல்

அப்போதுநல்லதங்காள் அரிவைஇளங்கொடியும்
நாத்திமார்தன்மனையில் நாயகியும்வந்துநின்று
கதவையுந்தட்டியவள் காரிழைநாயகியும்
நின்றுவொருசர்மம் நேரிழையுமப்போது
நான்பேசாத அண்ணியுடன் பேசவேவேண்டுமென்று
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனரண்மனையை ஆளவந்தமதனியரே
தமையனரண்மனையை தாங்கவந்தமதனியரே
அடி-காலுங்கடுக்குதண்ணி கச்சட்டைநோகுதண்ணி
நின்றகால்சோருதண்ணி நிலையுங்கடுக்குதண்ணி
கதவைத்திறவாயோ கண்ணாட்டி அண்ணியரே
என்றுமவள்கூறி இளங்கொடியும்நிற்கையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எண்ணாதவெண்ணம்எண்ணியவள்பள்ளிகொண்டாள்
ஏழுபிளளைபெற்றவளு மிளங்கொடியாளேதுசெய்தாள்
கதவருகில்வந்துநின்று கடவுளைக்கைதொழுது.

அண்ணிபத்தரையுங்கட்டியேபாங்காய்வளர்த்தபிள்ளை
எட்டரையுங்கட்டியே இயல்பாய்வளர்த்தபிள்ளை
பாலமுதுசோறுபெய்து பங்கிட்டுநான்வளர்த்தேன்
நெய்யமுதுசோறுபெய்து நேர்த்தியாய்வளர்த்பிள்ளை
கத்தரிக்காய்போலேயண்ணி கதறுதடிபாலரெல்லாம்[ம்
வெள்ளரிக்காய்போலேயண்ணி வெம்புதடிபாலரெலா
தண்ணீர் கண்ணீரென்றுசொல்லி தவிக்குதடிபாலரெல்
அன்னமென்றுசொல்லியலையுதடிமக்களெல்லாம்[லாம்
புத்திரர்பசியாறப் புத்திகளைச்சொல்லுமண்ணி
மனதுமிரங்கலையோ மாபாவி அண்ணியென்றாள்
இரங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மைந்தர்பசியாற வார்த்தைகளைச்சொல்லுமண்ணி
என்னை நீபார்க்காவிட்டா லென்பிள்ளைகளைப்பாருமண்
மூத்தானவாய்திறந்து உத்தாரப்சொல்லுமண்ணி [ணி
வாயைத்திறந்தாக்கால் வாய்முத்துசிந்துமோடி
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோடி
தங்கமுதிர்ந்துமண்ணி தடுமாறிப்போருயடி
எந்நேரமட்டுமண்ணி இதம்பாடிநிற்பேனுன்
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோதான்
வாயைத்திறந்து நீ மறுவார்த்தைசொல்லுமண்ணி
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இறங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
கவிழ்ந்ததிருமுகத்தை கண்ணெடுத்துப்பார்க்கவில்லை

## நல்லதங்காள் சாபத்தால் கதவு திறக்கப்பட்டது

அப்போது நல்லதங்கா ளாரணங்குஞ்செய்தாள்
பத்தினியுமநானால் பர்த்தாவுமவானால்
உத்தமியும்நானானால் ஒருநூல்கழுத்தியானால்
தான்பூட்டுஞ்சங்கிலியுந தானே திறக்கவேண்டும்
தானே திறககவேண்டுந் தாய்வீடுபொற்கதவு
பத்தினிதன்வாக்கு பலித்ததுதானப்போது
பத்தினிசொற்படிக்கு பளிச்செனத்திறந்திடுமாம்
உத்தமிதன்சொற்படிக்கு ஓங்கித்திறநதிடுமாம்
ஏட்கட்டுக்கதவுகள்தா னுடனேதிறந்ததப்போ
கதவுதிறந்தவுடன் கட்டழகிநல்லதங்காள்

முன்வைத்தகாலையங்கேபின்வைத்துத்தானுழைந்தாள்
ஆக்குமடைப்பளியு மடங்கலுஞ்சுற்றிவந்தாள்
எங்கேசுற்றிப்பார்த்தாலும் ஏதொருபண்டமில்லை
மூளியலங்காரி மூதேவிவீற்றிருக்கும்
கூடத்திற்கனிகளும் கொட்டியிருக்குதங்கே [யில்
அண்ணியற்குமுன்னேவந்து அருங்கிளியாள் நிற்கை
பெருமையாய்நல்லதங்காள் பெற்றெடுத்தபிள்ளைகளில்
அதிலேஒருபிள்ளை அக்கனியிலொன்றெடுக்க
மற்றுமொருபிள்ளை மாங்கனியெடுத்திடுமாம்
தென்பக்கமோடி தேங்காயெடுத்திடுமாம்
அப்போதுகண்டார்ளே அண்ணனுடதேவி
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
திட்டென்றெழுந்திருந்து தீவிரமாய்கைமூறித்தாள்
ஓட்டமாயோடிவந்து ஓரறைதான்கொடுத்தாள்
மாங்காயைத்தான்திருகி மாங்காயுடன்போட்டாள்
தேங்காயைத்தான்திருகி தேங்காயுடன்போட்டாள்
ஆயிரந்தேங்காயிலே அழுகல்காயைக்கொடுத்தாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
கண்ணாளன்பெற்றெடுத்த கற்கண்டேசர்க்கரையே
என்கொழுநன்பெற்றெடுத்த இரத்தினசிகாமணியே
காலமழையில்லாமல் கழனிவிளையாமல்
தேதிமழையில்லாமல் செந்நெல்விளையாமல்
பயிர்கள்விளையாமல் பஞ்சங்கள்வந்ததனால்
பர்த்தாசொற்கேளாமல் படுபாவிசீமைவந்தேன்
மாமனதுவீட்டிலே மாங்காயைத்தின்னாதீர்
தேங்காயைத்தின்னாதீர் சிறுவரென்மைந்தர்களே
மாங்காயுந்தேங்காயும் மக்களேதின்னாதீர்
வாருங்கள்மக்களென்று மடியிலேதூக்கிவைத்தாள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதங்காள்தனக்கும் நாயகியாள்பிள்ளைகட்கும்
பன்னிரண்டொருவருஷம் பஞ்சடைந்தகேழ்வரகை
ஓட்டைதிருகையெடுத் தொன்றிரண்டாய்மாவாக்கி
செல்லியைந்துபானையிலே இல்லையென்றுவைத்தாள்
வாசலிலேநிற்குமந்த வாழைமரந்தான்பிளந்து
ஈனுதவாழை இளவாழைத்தண்டொடித்து
வாழைமரம்பிளந்து வைத்தாளடுப்பிலேதான்.

ஊதுகிருள்பாவி ஒருவாய்புகைகிளம்ப
சிந்தினள்மூக்கையங்கே திருக்கண்சிவந்திடவே
அப்போது நல்லதங்கா ளாரணங்குகூறலுற்ருள்
நம்முடைய அண்ணிக்கு நம்மால்வருத்தமென்ன
மூளியலங்காரி மூதேவிசண்டாளிக்கு
இந்தவருத்தங்கள் இப்படிநேர்வதென்ன [கு
என்றுசொல்லிநல்லதங்கா ளெடுத்துரைத்தாளக்கினிக்
நான்-பத்தினியுமெய்யானல் பற்றியெரியவேண்டும்
உத்தமியும்நானுனல் ஓங்கியெரியவேண்டும் [டும்
கூழும்கொதிக்கவேண்டும் குழந்தைகள்பசியாறவேண்
என்று-பத்தினியாள்சொல்லையிலே பற்றியெரியுதங்கே
கொம்பனையாள்சொற்படிக்கு கூழும்கொதித்திடுமாம்
அப்போது நல்லதங்கா ளண்ணியருக்கேதுரைப்பாள்
காய்கிறகூழானலும் கட்டழகிவார்க்காயோ
கொதிக்கிறகூழதனைக் கொடுப்பாய்மதனியென்ருள்
அப்போது-மூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
தைப்பிறைகண்டேனுனல் தரையிலிறக்குவண்டி
மாசிப்பிறைகண்டேனுனல் மாதேயிறக்குவண்டி
மூப்பிறைகண்டேனுனல் மூன்ருலிறக்குவண்டி
மைந்தனுக்குமுந்தனுக்கும வாரப்பேண்டிகூழதனை
இருந்தாலிருமென்ருள் நடந்தால்நடவுமெனருள்
அந்தவுரைகேட்டு அழகுள்ள நல்லதங்காள்
மங்கைமனதுநொந்து மதிமுகம்வேருபட்டு
உள்ளமனமெரிய உத்தமியாளேதுசொல்வாள்
குழந்தைகுடிக்கக்கொஞ்சம் கூழுக்குப்பஞ்சமோதான்
மக்கள்குடிக்கக்கூழு மண்டலத்தில்கிட்டாதோ
இரக்கப்புறப்பட்டால் எங்கேயுங்கிட்டாதோ
வாங்களடாமக்களா வரிசையாய்என்பிறகே
வைத்துவிளையாட மச்சினிமார்மெத்தவுண்டு
கூடிவிளையாட குழந்தைமார்மெத்தவுண்டு
ஒப்பார்உறன்முறையா ருண்டுபலபோகள்
பாட்டன்வீடுபோய்நாம் பாலமிர்தமுண்ணலாமே
தாய்வீடுபோனலே தயிர்சாதமுண்ணலாமே
அண்ணன்வீடுபோனலே ஆலித்திருக்கலாமே
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
அண்டைவீட்டுப்பெண்டுகளா அசலாத்து அப்பியரே
தண்ணீர்க்குப்போகிற தாய்மாரேபெண்டுகளா

என்-அண்ணியார்செய்ததொரு அனியாயங்கேட்டீர்க
மதனியார்செய்ததொரு மரியாதைபார்த்தீர்களா [ளா
அண்ணனார்வந்தபின்பு அறிந்ததைச்சொல்லுமென்றா
தமையனார்வந்தபின் தாய்மாரேசொல்லுமென்றாள் [ள்
அந்தசொற்கேட்டிருந்த அரிவைமாரெல்லோரும்
நல்லதங்காளைப்பார்த்து நலமாகவ துசொல்வார்
எந்தனுடவீட்டுக் கெழுந்துவா நல்லதங்காள்
அவரவர்கள் தன்வீட்டுக் கழைத்தார்களெல்லோரும்
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைகோபமென்ன
பச்சரிசிகுற்றித்தாரோம் பாலும்கறந்துதாரோம்
பாலரும்நீயுமாய்ப் பசியாறிப்போங்களென்றார்
அப்போது நல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
அண்டைவீட்டுத்தண்ணீர் யாம்குடியோம் அப்பியரே
அசல்வீட்டுத்தண்ணீர் யாம்குடியோம் அப்பியரே [ள்
அண்ணனார்வந்தபின்பு அருஞ்சேதிசொல்லுமென்றா
அப்போது பெண்களெல்லா மதிகமாயெடுத்துரைப்பார்
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைகோபமென்ன

### நல்லதங்காள் காட்டுக்குப் போகும்போது கணையாழி மோதிரமும் ஆவாரந் தழையும் அடையாளமாகப் போட்டுவைத்தல்

கோபம்பொறுக்காமல் கொல்லைவழிதானடந்தாள்
ஆவாரஞ்செடியொடித்து அடையாளம்போடலுற்றாள்
கொன்றைத்தழையொடித்து கொடிவழியேதானடந்தா
கணையாழிமோதிரத்தை கழற்றியேபோடலுற்றாள் [ள்
அத்துவானகானகத்தி லாரணங்குபோய்நடந்தாள்
காட்டானைவனத்திலே கன்னிநடக்கலுற்றாள்
வாருமடாமக்களா வரிசையாயென்பிறகே
பாட்டனார்வைத்ததொரு பழஞ்சோலைபார்த்தழுதாள்
ஆத்தாள்வைத்ததொரு அழகுசோலைபார்த்தழுதாள்
குத்திக்கொண்டே நான் குடங்கொண்டுநீர்சொரிந்தேன்
குடங்கொண்டுநீர்சொரிந்தேன் கொம்புகளாஇப்போது
பாவிவருவேனென்று பாலைப்பூத்தீர்களோ
தோஷிவருவேனென்று துக்கமற்றுக்காய்த்தீர்களோ
வாருங்கள்மக்களா வரிசையாயென்பிறகே
என்றுசொல்லி நல்லதங்காள் இயலாயுரைக்கையிலே
தண்ணீரென்றுசொல்லித் தவிக்கிறார்பாலரெல்லாம்

அன்னமென்றுசொல்லி அலைகிறார்பாலரெல்லாம்
காரைப்பழம்பறித்து கைநிரம்ப அள்ளியிட்டாள்
சூரைப்பழம்பறித்து இட்டாளே மக்களுக்கு
தொரட்டிப்பழம்பறித்து தின்னுங்கள்மக்களென்றாள்
கானலுறைக்குதென்று கையாற்குடைபிடித்தாள்
என்னருமைமக்களா என்பிறகேவாருமென்றாள்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகலுற்றாள்
அப்போதுநல்லதங்காளரிவையருமெண்ணலுற்றாள்
உற்றுநினைத்தாளே ஒருகோடியோசனையை
பர்த்தாவின்வார்த்தைதள்ளிப்பதறிநடந்தோமே
கணவனிடவார்த்தையது கடந்துநடந்தோமே
எங்கேயேரவானம் இடிந்ததென்று நானிருந்தேன்
தப்பாதேவானமது தலையிலிடிந்ததென்றாள்
ஆகாயவானமது அதிரவிழுந்ததென்றாள்
எண்ணறவாசித்து எழுத்தறக்கற்றாலும்
பெண்புத்தியாலல்லோ பிழைவந்துநேர்ந்ததென்றாள்
சதிகாரப்பாவியைநான் பிறப்பென்றுநம்பிவந்தேன்
பழிகாரஅண்ணனை நான் பலமென்றுநம்பிவந்தேன்
இந்தவுடலோடே இனிமீண்டுபோவோமானால்
பலருஞ்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
சதுரார்சிரிப்பார்கள் சரியொத்தாரேசுவார்கள்
இந்தவுடலோடே இனியிருக்கலாகாது
வாங்களடாமக்களா வழியாய்வழிநடந்து
மாண்டுமடிவோமென்று மங்கைமனந்துணிந்து
செத்துமடிவோமென்று சேயிழையாள்மனந்தெளிந்து
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
என்றுசொல்லிநல்லதங்காளியலாகவழிநடந்து
அவள் அந்தவனந்தாண்டி அப்புறத்தேபோகலுற்றாள்
வேறேயொருகானகத்தில் மெல்லியரும்வந்துநின்று
கானகத்தில்பலசிறுவர் காராவைமேய்த்திருந்தார்
மாடுமேய்க்கும்பிள்ளைகட்கு மகராசியேதுசொல்வாள்

## நல்லதங்காள் இடையரைப் பாழுங்கிணறு இருக்குமிடம் கேட்குதல்

மாடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாஞ்சிறுதம்பியரே
ஆடுமேய்க்கும்பிள்ளைகளா அறியாதபாலகரே
பச்சரிசிநான்தாரேன் பால்தாரேனுங்களுக்கு

கச்சாயம்நான் தாரேன் கண்ணுட்டிமக்களென்ருள்
பாழுங்கிணறென்று பார்க்கிலேயோ தம்பியரே
இருண்டகிணறென்று காட்டுங்கள் எந்தனுக்கு
அப்போது மாட்டிடைய ரன்பாகயேது சொல்வார்
பாழுங்கிணறு னக்கேன் பத்தினியே சொல்லுமென்ருர்
இருண்டகிணறு னக்கேன் என் தாயே சொல்லுமென்ருர்
அப்போது நல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
தண்ணீர் தாகமப்பா தாங்கமுடியவில்லை
தண்ணீர் குடிக்கவேணும் தாகவிடாய் தீரவேணும்
கட்டமுதுண்ணவேண்டும் களையாறவேண்டுமென்ருள்
அப்போது மாட்டிடைய ரரிவையர்க்கேது சொல்வார்
அருகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ள பாழ்ங்கிணறு
கோரைபடர்ந்திருக்கும் கொடிதான பாழ்ங்கிணறு
எதிரேயிருக்குதம்மா ஏற்றமுள்ள பாழ்ங்கிணறு
என்றுமே சொன்னபின்பு ஏந்திழை நல்லதங்காள்
அந்தவிடந்தாண்டி அரிவையும் வாராளே
பாழுங்கிணற்றருகே பத்தினியாள் வந்துநின்று
இருண்டகிணற்றருகே இளங்கொடியாள் வந்துநின்று
மைந்தரைப்பார்த்துமல்லோ மங்கையுமே துரைப்பாள்
பாழுங்கிணற்றைப்பார்த்து பாலகரே நீர் பயந்தீர்
இருண்டகிணற்றில் தள்ள எடுத்துவளர்த்திட்டேனே
மாளவோ இங்குவந்தோம் மாபாவி பட்டணத்தில்
மன்னரவர் கேட்டுவிட்டால் மாண்டுமடிந்திடுவார்
கொற்றவர் கேட்டுவிட்டால் கூடமடிந்திடுவார்
அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும் [தாள்
அண்ணன் கொடுத்ததொரு பட்டாடை மடித்துவைத்
அண்ணி கொடுத்ததொரு தேங்காயை மேலேவைத்தாள்
பாலூட்டு பாலடையை பத்தினியாளங்கேவைத்தாள்
மோருகுடிக்கும் பாத்திரத்தை மொய்குழலாளங்கே வைத்
தாமரையிலையைக்கிள்ளி தாலிகழற்றிவைத்தாள் [தாள்
மாவிலைகிள்ளியல்லோ மங்கிலியம் வாங்கிவைத்தாள்
அப்போது நல்லதங்கா ளரிவையுமே துசொல்வாள்
மங்கிலியமிவ்விடத்தில் மலையாய்ச்சமையவேண்டும்
ஓங்கிவளரவேண்டும் ஒருகல்லாய்ச்சமையவேண்டும்
காலகத்தில் வளர்ந்து கல்லாய்ச்சமையவேண்டும்
பத்தினியாள் சொன்னவுடன் பாருங்கல்லாகியதாம்
உத்தமியாள் சொன்னவுடன் ஒருகல்லாய்நின்றதங்கே

## நல்லதங்காளும் பிள்ளைகளும் கிணற்றில் விழுந்திறத்தல்

அப்போது நல்லதங்காளரிவையிளங்கொடியும்
மாளுகிறேனென்றுசொல்லி மலையேறித்தெண்டனிட்
சுற்றிவலம்வந்து சூரியனைத்தெண்டனிட்டாள் [டாள்
தெண்டனிட்டபிற்பாடு தேவியிளங்கொடியும்
ஒவ்வொருமக்களாய்த் தள்ளினாள் கங்கையிலே
ஐந்துபிள்ளை ஆறுபிள்ளை அடுக்காகத்தள்ளிவிட்டாள்
அப்போ-தாய்க்குத்தலைமகனும் தானோடிவிட்டான்
ஓடியதலைமகனும் உத்தமிக்கேதுரைப்பான்
தாயேநீநல்லதங்காள் தயவாகக்கேளுமம்மா
தப்பிப்பிழைத்திடுவேன் தாயாரபோசொல்லுகிறேன்
ஓடிப்பிழைத்திடுவேன் உன்பேரைச்சொல்லுகிறேன்
எள்ளுந்தண்ணீருமம்மா இறைத்துவருவேனம்மா
திங்கள்திவசங்கள் பண்ணிவருவேனம்மா
என்னைத்தான்கொல்லாதே எனைப்பெற்றமாதாவே
ஒருபிள்ளைபெற்று உலகத்தையாளலையோ
ஏழுபிள்ளைபெற்றுமல்லோ ஏழைமதியானாயம்மா
மாடுமேய்த்துக்கஞ்சியானும் குடிப்பேனேமாதாவே
என்னைநீகொல்லவேண்டாம்என்னைப்பெற்றமாதாவே
போனதெல்லாம்போகட்டும் இருவர்பிழைத்திடுவோம்
அப்போது நல்லதங்காளரிவையெடுத்துரைப்பாள்
அறுவர்கள்தமதுயிர்க்கும் அதிகமோநம்முயிர்தான்
நாமோடிப்பிழைத்தாலும் ஒருவரில்லையென்பார்கள்
தப்பிப்பிழைத்தாலும் தாயற்றபிள்ளையென்பார்கள்
கண்டார்சிரிப்பார்கள் காசினியோரேசுவார்கள்
பார்த்தோர்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
வந்தோர்சிரிப்பார்கள் வாயுள்ளோரேசுவார்கள்
வாடாயப்பாமகனே கூடயிறந்திடுவோம்
என்றுமேநல்லதங்காளிடையரைத்தானழைத்து
கூடிப்பிடியுமென்றாள் கொற்றவனார்தன்மகனை
ஓடிப்பிடியுமென்றாள் உத்தமியாள்தன்மகனை
கொச்சியிடையரெல்லாம் கூடிப்பிடித்துவந்தார்
வந்தபோதுபிள்ளைதனைத் தள்ளினாள்கங்கையிலே
தள்ளினபிற்பாடு தனியாகநல்லதங்காள்
பூராபபாருடையுடுத்தி பத்தினியாள்நல்லதங்காள்
தானுஞ்சலியாமல் தண்ணீரிலேபோய்விழுந்தாள்

அப்போதுகங்காதேவி மூன்றுபிழைபொறுத்தாள்
மூன்றுபிழைபொறுத்து மூக்காலும்பொங்கிவிட்டாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
தண்ணீர்த்தவளையைப்போல் தானும்மிதக்கலுற்றாள்
பச்சைக்கிளிபோலே பறக்கிறாள்பாழ்ங்கிணற்றில்
அவளுடையகூந்தலது அறுபதுபாகமது
அறுபதுபாகங்கூந்த லலைகிறதுகங்கையிலே
இப்படியாக இவர்களிருக்குஞ்வேளையிலே
வேட்டைக்குப்போயிருந்த விருதுள்ளராசனுக்கு
தோள்கள் துடிக்கிறதும துர்க்குறிகள்நேருவதும்
இயலானகண்களிலே ஈவந்தடிக்கிறதும்
ஆடுந்தொடைகளெல்லா மப்போதுடித்திடுமாம்
பட்டத்துயானையங்கே பதறிக்கவிழ்ந்திடுமாம்
யானையுஞ்சேனையும் அத்தனையுந்தான்மடிந்து
குதிரைபரிவாரம் கோடிதளந்தானிறந்து
இப்படியாக இடறுகள்நேர்ந்ததங்கே
ஒற்றைநாய்தலை னுடனேஉளம்நைந்துவீடுசேர்ந்தான்

### மூளியலங்காரி தன் கணவனுக்குக் கள்ள உபசரணைசெய்தல்

அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
பர்த்தாவுக்குபசரணை பைங்கிளியும்செய்யலுற்றாள்
ஆள்னுக்குபசரணை ஆரணங்குசெய்யலுற்றாள்
கெண்டியில்தண்ணீரும கொண்டுவந்தாள்பன்னீரும்
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
சரணஞ்சரணமென்று சாய்த்தாள் திருமுடியை
பாதஞ்சரணமென்று பர்த்தாவைத்தெண்டனிட்டாள்
தண்ணீர்குடியும்பர்த்தா தாகவிடாய்தீரும்பர்த்தா [ள்
வெந்நீர்குடியும்பர்த்தா விடாயாற்றிக்கொள்ளுமென்று
அப்போதுநல்லதம்பி அவளுக்கெடுத்துரைப்பான்
மூளியலங்காரி மூதேவிக்கெடுத்துரைப்பான்
தண்ணீர்குடிப்பேனடி தாகவிடாயாற்றிக்கொள்வேன்
நல்லதென்னுடன்பிறந்த நல்லதங்கா நாயகியை[தேன்
காட்டிலேகண்டேன்பெண்ணே வீட்டுக்கனுப்பிவைத்
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவந்தவளெங்கேயென்று
என பிறப்புநல்லதங்கா ளிங்குவந்தவளெங்கேயடி [ன்
என்றுரைக்கநல்லதம்பி எடுத்துரைப்பாள் நாயகியாள்

கண்டதுகண்டாற்போல்கணவனுக்கெடுத்துரைப்பாள்
வந்தாளிருந்தாள்பர்த்தா வண்ணப்பாய்போட்டேன்ப
மக்களுடனவந்த வரவைக்கண்டுநானுமப்போ [ர்த்தா
கால்கண்டநேரத்திலே கடுகவுலையுமவைத்தேன் [ன்
மூணைமுறியாப்பச்சரிசிதனை மலைபோலநான்சமைத்தே
வாழைக்காய்கொய்தேன் வழுதலங்காய்காம்பரிந்தேன்
ஈரப்பலாக்காயை இருமூள்ளும்போக்கடித்தேன்
கத்தரிக்காய்கொய்தேனே கருணைக்குழம்புவைத்தேன்
மூள்ளிக்காய்கொய்தேனே முருங்கைக்காய்தானசமைத்
தேன்,பச்சென்றகீரையொன்று பசுவெண்ணெய்போல்
பத்துவிதக்கறியும பாங்கானபச்சடியும் [சமைத்தேன்
எட்டுவிதக்கறியும் இயலானபோசனமும்
அடுக்கடுக்காய்கறிகளன்பாகநான்சமைத்தேன்
உன்னுடன்தான்பிறந்த உத்தமியாள்நாயகியும
ஏழுபிள்ளைதனக்கும இளங்கொடியாள்நாயகிக்கும்
பெரியகலமெடுத்தேன பிள்ளைகட்குசசோறுமிட்டேன்
சின்னகலமெடுத்தேன் சிற்றடிக்குச்சோறுமிட்டேன்
சுற்றிகறியும்வைத்து செம்புதயிர்முன்னேவைத்தேன்
அள்ளிபருப்புமிட்டு அதுகொண்டநெய்சொரிந்தேன்
உண்ணுங்களென்று உபசரணைசெய்துநின்றேன்
தின்னுங்களென்றுசொல்லி தெருவாசல்காத்திருந்தே
அப்போதுநல்லதங்காளரிவையிளங்கொடியும் [ன்
உண்டுபசியாறி உட்கட்டில்வீற்றிருந்தாள்
அரிபிளவுவெற்றிலையும் அள்ளியேநான்கொடுத்தேன்
தாம்பூலநதானதரித்துத் தயவாகநலலதங்காள்
சொக்கட்டான்சதுரங்கம தோகையுநதானுடி
காற்றடிக்கும்மண்டபத்தில் காரிகையும்வீற்றிருந்தாள்
தூக்கமவருகுதென்றாள் துன்னிலக்கண்ணாளும்
பாங்கியரைததானழைத்துப் பள்ளியறைசோடியென்
தாமக்கருங்குழல்மார் தாதியர்களோடிவந்து [றேன்
சொர்னப்பொன்கட்டிலிட்டுச் சோடித்தார்தாதியர்கள்
தங்கப்பொன்கட்டில்மேல் தகுந்தமல்லிகைப்பூசொரிந்
பளிங்குமாமண்டபத்தில் பாங்கியர்விரித்துதறி [தார்
கெண்டிகையும்பூமடலும் கொண்டுவந்துவைத்தார்கள்
பள்ளிகொள்ளென்றுசொல்லி பாவைக்குதெண்டனிட்
அப்போதுநல்லதங்காளரிவையெழுந்திருந்து[டேன்
பஞ்சணைமெத்தையிலேபள்ளிகொண்டாள்பாவையரும்

சாதிமணிக்கவரி சந்தனத்தாலூதுவர்த்தி
கோவைமணிக்கவரி குங்குமத்தாலூதுவர்த்தி
வீசினர் தாதிமார் மெல்லிக்கிருபுறமும்
கவரிபரிமாறக் கட்டழகி தூங்கினளே
தூங்கினள் மூன்றுசாமம் துன்னீலக்கண்ணாளும்
பொழுதுசரிந்ததென்று பொற்கொடியைநானெழுப்ப
தூங்கியெழுந்திருந்து துரிதமுடன் நல்லதங்காள்
என்னையேதானேக்கி இளங்கொடியாளேதுசொல்வாள்
நாத்தினரே நாத்தினரே நலமாகவெந்தனுக்கு
உணணக்கலமில்லையென்று உத்தமியுந்தானுரைத்தாள்
அப்போது நானகாலும் அரிவையிளங்கொடிக்கு
உண்ணக்கலமெடுத்து உத்தமிக்குநான்கொடுத்தேன்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனாண்மனையை ஆளவந்தமதனியரே
எனக்கொருசேலையென இருசேலை நான்கொடுத்தேன்
மூத்துவாணச்சேலை மூனறெசித்து நான்கொடுதேன்
பச்சைவாணச்சேலையது பார்த்தாவே நான்கொடுத்தேன்
அழகுபணிகொடுத்தேன் ஆபரணம் நான்கொடுத்தேன்
தங்கப்பணிகொடுத்தேன் தகுந்தபொருள்கைகொடுத்தே
ன், சிலவுக்கோராயிரம்பொன் சிறப்பாகநான்கொடுத்தே
பாலர்விளையாட பம்பரங்கள் நான்கொடுத்தேன் [ன்
சிறுவாவிளையாடச் சிங்காரத்தேர்கொடுத்தேன்
மாமிவீடுபோவதற்கு மச்சுரதங்கேட்டாள்
ஆளனவீடுபோவதற்கு அழகுரதங்கேட்டாள்
அத்தனையும் நான்கொடுதேன் அன்பாகநாத்திக்கு
கேட்டதெல்லாம் நான்கொடுத்தேன் கிளிமொழிமாதுக்
பாவையிளங்கொடியும் பத்தினியாள்பாலரெல்லாம் [கு
பார்ப்பாரவீதியெல்லாம் பந்தாடிவந்தார்கள்
செட்டித்தெருவெல்லாம் செண்டாடிவந்தார்கள்
களைத்துவருவாரென்று கடுக்கக்குடமெடுத்தேன்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போயிருந்தேன்
அப்போது நல்லதங்காளரிவையிளங்கொடியும்
இருந்தாளெழுந்திருந்தாளின்னவிடம் நானறியேன்
போனவிடம் நானறியேன் போயிருக்குந்தாவறியேன்
அப்போ-பந்தம்பிடித்துப்பார்த்தா பலதெருவுநதேடிவந்
தேன், காடெல்லாநதேடிவந்தேன் உடமபெல்லாம்
ஆனலழகுமனன ஆளனேஎந்தனுக்கு [நோகுதிப்போ

ஒருபானைஜலம்வைத்துத் தருவாயோஎன்கணவா
என்றுசொல்லக்கேட்டுமன்னன் இயலானநல்லதம்பி
ஆங்காரக்கோபமுடன் ஆனந்தவாழ்மார்பன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தமர்மமெல்லாம் எனக்குத்தெரியவரும்
என்பிறவிநல்லதங்காள் எங்கேதான்போனாளிப்போ
நீ-இத்தனைசெய்திருந்தால் ஏன்போனாளென்பிறவி [ம்
நான்-அறிவேனறிவேனுன் ஆசாரவார்த்தையெல்லா
உன்-கற்றவித்தையெல்லாம் கண்டறிவேனிப்போது
போதுமடியிவ்வார்த்தை பொற்கொடியேகட்டிவையும்
இவ்வளவுசெய்திருந்தால் ஏன்போனாள் நல்லதங்காள்
கொஞ்சிவுபசாரம் கூறவந்தாயெந்தனுக்கு
கள்ளவுபசாரங் காட்டவந்தாயெந்தனுக்கு
என்பிறவிநல்லதங்கா ளெழுந்துபோனவழியறியேன்
என்றுசொல்லித்தானெழுந்தா னியலானநல்லதம்பி
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தேரோடும்வீதி தெருவீதிதான்கடந்து
அண்டையசல்பெண்டுகளே அக்கமாரேதங்கையரே
எதிர்வீட்டுப்பெண்டுகளே எனைப்பெற்றதாயாரே
ஆரடிதங்கையரே அசல்வீட்டுத்தாய்மாரே
என்பிறவிநல்லதங்கா ளிங்குவரக்காண்கிலையோ
ஏழுபிள்ளைநல்லதங்கா ளிங்குவரக்காண்கிலையோ
அசலவீட்டுத்தங்கைமார்க ளரிவையரெடுத்துரைப்பார்
வந்தாளேவந்தாளே மதனியார்மாளிகைக்கு
வந்ததேபோதுமப்பா மாபாவிவாசலுக்கு [வி
அவள்-பண்ணாதகோலமெல்லாம் பண்ணினாளுன்தே
வந்தவுடனேயவள் வாசல்கதவடைத்தாள்
ஓடிக்கதவடைத்தாள் ஒருமட்டாய்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்தாள் தாள்பூட்டிமண்ணறைந்தாள்
ஈரமண்கொண்டுவந்து இருபக்கந்தானறைந்தாள்
குழந்தைகுடிப்பதற்கு கூழுங்கிடையாதென்றாள்
பசியதுதான்தணிய பச்சைஜலமில்லையென்றாள்
களைகள்தெளிவதற்கு கரண்டிஜலமில்லையென்றாள்
செய்யாதகோலமெல்லாம் செய்துவைத்தாளுன்தேவி
கவிழ்ந்ததிருமுகத்தை கண்ணெடுத்துப்பாரேனென்று
பண்ணாதகோலமெல்லாம் பண்ணினாளுன்தேவி [ன்
கொன்றைகள்வைத்திருக்கும் கோணாதசாலைவழி

அருமைமக்களெழுவருடன் ஆத்தாளும்போய் நடந்தா
போனதோர்சேதியைப் போர்மன்னன் தானறிந்து [ள்
தங்கையும்போனவழி தானுமறியவில்லே
என்றுமேநல்லதம்பி இயலாகவேதுசொல்வான்
கன்னிநல்லதங்கையைநான் காட்டிலேகண்டழுதேன்
வீட்டுக்குவந்ததொரு மெல்லியரைநானறியேன்
ஏதேதுசெய்தாளோ என்னுடையபெண்சாதி
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மருந்துதான்வைத்தாளோமாயப்பொடிபோட்டாளோ
ஈடுதான்வைத்தாளோ என்னவகைசெய்தாளோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானினைந்து
அப்போதுநல்லதம்பி ஆணழகனேது செய்தான்

நல்லதம்பி நல்லதங்காளைக்
காட்டில் தேடுதல்

அப்போ-ஒற்றைநாயோடேயல்லோஓடுகிறான் நல்லதம்
ஓட்டமாயோடும்போது உத்தமனார்வீரியற்கு [பி
மீசைதுடித்திடுமாம் வெகுகோபம்வந்திடுமாம்
கண்கள்சிவந்திடுமாம் காந்தாளம்வந்திடுமாம்
பக்கச்சதைகளெல்லாம் பம்பரம்போல்துடித்திடுமாம்
ஆடுந்தொடைகளெல்லாம் அம்பாய்ப்பறந்திடுமாம்
ஆவாரங்கொத்ததனை அடையாளந்தான்பிடித்தான்
கணையாழிமோதிரத்தைக் கண்டுமேதானெடுத்தான்
எடுத்துமேநல்லதம்பி இயலாகத்தானினைப்பான்
இந்தவழியிலேதான் இவளுமிருக்கவேண்டும்
என்றுமேகுதிரைவிட்டான் இயலானநல்லதம்பி
குதிரைவிடும்போது கொற்றவனுமேதுசொல்வான்
மாடுமேய்க்குந்தம்பியரே மாட்டாஞ்சிறுபாலகரே
என்பிறப்புநல்லதங்கா ளிங்குவரக்கண்டதுண்டோ
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவரக்கண்டதுண்டோ
அப்போதுமாட்டிடையர் அறியவெடுத்துரைப்பார்
வந்தாளிருந்தாளையா வழிமார்க்கம்போனாளையா
உங்கள்குலமென்றறியோம் உடன்பிறவியென்றறியோ
இருட்டுக்கிணறெங்கே என்று எந்திழையுங்கேட்டாளே [ம்
காட்டிக்கொடுத்தோமையா காரிழையாள்நாயகிக்கு
அப்படிச்சொல்லுகையி லன்பானநல்லதம்பி [மா
நீங்கள்-காட்டிக்கொடுக்கலாமா கடக்கப்போய்நிற்கலா



பார்த்துமிருந்தீர்களா பழிகாரப்பாவிகளா
எனக்குப்பிறப்பொழிய உங்களுக்குப்பிறப்பல்லவோ
என்றுமே நல்லதம்பி இயலாகத்தானடந்தான்
காடுசெடிகளெல்லாம் கனக்கவேதேடிவாரான்
ஆறுசுனைகளெல்லாம் அங்கங்கேதேடிவாரான்
குட்டைகுளங்கண்டாலே குதித்திறங்கித்தேடிவாரான்
துறவுகளைக்கண்டாலே துள்ளிக்குதித்திடுவான்
வழியிலிப்படித்தேடி வருகின்றவேளையிலே [தான்
நல்லதங்காள் விழுந்திறந்த நற்கிணற்றின் முன்னேவந்
பாலூட்டும்பாலாடை பூவைபடையாளம்
மங்கிலியங்கண்டானே மன்னனந்தநல்லதம்பி

நல்லதங்காள் கிணற்றில் விழுந்திருந்ததைக் கண்டு
நல்லதம்பி பரதவித்தல்

அப்போ-பாழுங்கிணற்றருகே பார்த்துவயிறெரிந்தான்
இருண்டகிணற்றருகே ஏங்கிமனந்தளர்ந்தான்
தங்கைதங்கையென்றல்லவோ தரையிற்புரண்டழுதான்
அம்மாடியென்றல்லவோ அடித்துப்புரண்டழுதான்
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
பவளம்போல்கண்ணீரைப் பக்கமெல்லாஞ்சோரவிட்டு
ஐயோசிவனேயென்று அடித்துப்புரண்டழுதான்
பம்பைமயிரையெல்லாம் பாழ்ங்கிணற்றில்பிச்செறிந்தா
ஓடிக்குதித்தானே உத்தமியாள்கங்கையிலே [ன்
தாண்டிக்குதித்தானே தயவானகங்கையிலே
உடற்பிறந்தாள்பிள்ளையெல்லாம் ஓடியெடுக்கலுற்றான்
தன்பிறப்புப்பிள்ளைகளைத் தாவியெடுக்கலுற்றான்
தங்கையைமெள்ளவல்லோ தடவியெடுத்தானே
வாரியெடுத்துவைத்து வண்ணமடிமேலே
முகத்தோடேமுகம்வைத்து முத்தமிட்டுகொண்டானே
செத்தபிணத்துக்கு சீரிட்டுப்பார்த்தழுதான்
மாண்டபிணத்துக்கு வரிசையிட்டுபபார்த்தழுதான்
நாவற்பழமோதான் நல்லதங்காள்பெற்றபிள்ளை
கோவைப்பழமோதான் கொம்பனையாள்பெற்றபிள்ளை
கையொத்தபாலகண்டி கண்ணூட்டிபெற்றபிள்ளை
ஈச்சம்பழமோதான் என்னுச்சிபெற்றபிள்ளை
கைக்கேற்றபாலகண்டி கண்ணூட்டிபெற்றபிள்ளை
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானுமப்போ

## நல்லதம்பி நல்லதங்காளையும் பிள்ளைகளையும் தகனஞ் செய்தல்

தங்கையைத்தானெடுத்து தகனம்செய்யவேணுமென்று
மூதாரிதன்னாலே உடற்பிறப்பை நானிழந்தேன்
மாபாவிதன்னாலே மருமகளை நானிழந்தேன்
பெண்சாதிதன்னாலே பெண்பிறப்பை நானிழந்தேன்
ஊரில்நெருப்பெடுத்தால் உலகோர்சிரிப்பாரென்று
நாட்டில்விறகுகொண்டால் நல்லோர்சிரிப்பாரென்று
சந்தனக்கட்டைகொண்டு சதுராய்ப்பிளந்தடுக்கி
குங்குமக்கட்டைகொண்டு குளிரப்பிளந்தடுக்கி
சந்தனக்கட்டையிலே தங்கையைத்தான்வளர்த்தி
குங்குமக்கட்டையிலே குழந்தைகளைத்தான்வளர்த்தி
வரப்பேரிநெல்லதனை வாய்க்கரிசிபோட்டானங்கே
செண்பகமாலை சிவமாலைவந்திடுமாம்
மல்லிகைமாலைகொண்டு மன்னனலங்கரித்து
சுற்றிவந்துகொள்ளி வைத்தானேதோகைக்கு
வலம்வந்தழுதுகொள்ளி வைத்தானேநல்லதம்பி
நெருப்புப்பிடிக்கவில்லை நீருய்ச்சமையவில்லை
அக்கினியும்பற்றவில்லை அனலாய்ச்சமையவில்லை
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைகோபமென்ன
என்மேலேகோபமென்ன வைக்காதேஎனபிறப்பே
பற்றியெரிந்தாயானல் பழிகளைவாங்கிடுவேன்
ஓங்கியெரிந்தாயானல் உயிர்களைவாங்குவேனன்
நாளைப்பகலுக்குள் நான்வாரேன் தங்கையரே
இப்படிச்சொல்லியண்ணன் இரண்டடி தானடந்தான்
நடந்தவன்போனபின்பு நாயகியாளக்கினிதான் [ம்
குப்பென்றுதானெழுந்து கொழுந்துவிட்டெரிந்திடுமா
இப்படியாக இருக்கின்றவேளையிலே

## நல்லதம்பி நல்லதங்காளைத் தகனஞ்செய்து வீடுவந்து சேர்தல்

நல்லதம்பியப்பொழுது நலமாகத்தன்மனையில்
எட்டுநாள் துக்கமன்னன் இயல்பாய்ச்சிறைகாத்து
அறுகுபொறுக்கியண்ணன் அலரத்தலைமுழுகி
மூக்காட்டையிட்டுராஜன் மூலையிலேபோய்ப்படுத்தான்
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தனதுடையபத்தினியாள் தன்னெதிரேவந்துநின்று

ஆளன்முகம்நோக்கி ஆணழகியேது சொல்வாள்
ஏன்காணும்ராஜமன்ன எந்தன்மேல்கோபமென்ன
பொல்லாததங்கையவள் போனாலும்போய்ப்போருள்
ஆகாதநல்லதங்கா ளவள்போனல்போய்ப்போருள்
நீ-காலின்மிதியடியைக் கழற்றிவைக்கலாகாதோ
கொண்டுவந்தவேட்டைகளைக் கூறிடவுமாகாதோ
அப்போது நல்லதம்பி ஆளனெடுத்துரைப்பான்
எனக்குமுனக்கும்பெண்ணே எட்டுமாதம்விரதமுண்டு
என்-வருத்தந்தொலைந்தாலேமாதே நானுண்டிடுவேன்
உனக்குமெனக்கும்பெண்ணே ஒருபிள்ளையுண்டலவோ
நம்முடையபிள்ளைக்கு நலமாகயிப்பொழுது [டும்
கலியாணம்செய்யவேண்டும் கண்குளிரப்பார்க்கவேண்
கண்ணுள்ளபோதேபெண்ணே கண்காட்சிபார்க்கவே
என்று-மூளியலங்காரி மூதேவி நாயகிமேல் [ண்டும்
மன்னவனார் நல்லதம்பி மர்மந்தொடுத்தானே
கலியாணகாரியத்தைக் கடுகவேசெய்யவென்று

## நல்லதம்பி பிள்ளைக்குக் கலியாணப்பந்தல் அலங்கரித்தல்

சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
கரும்பாலேகால்நிறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
முத்தைப்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
பவள்மதைப்பிளந்து பந்தக்காலலங்கரித்து
தேக்குமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வாழைமரம்பிளந்து வாசற்காலலங்கரித்தார்
இட்டார்கள்பந்தலங்கே இருநூற்றுக்காதவழி
தொடுத்தார்கள்பந்தலங்கே தொண்ணூற்றுக்காதவழி
ஓலையாலபந்தலல்லோ உத்தமர்க்குத்தானுமிட்டார்
நலலதம்பிசேனைகட்கு நலமாகப்பந்தலிட்டார்
தன்னுடையசேனைகட்குத் தகுமானபந்தலிட்டார்
அபபோது நல்லதம்பி ஆணழகனேது செய்தான்
கல்தச்சர்களையழைத்துக் கட்டழகனேது சொல்வான்
தச்சர்களே தச்சர்களே தகுமானதச்சர்களே
என்வார்த்தைகேளுங்க ளெனக்கிசைந்ததச்சர்களே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எநதனுடன்பிறநத எனக்கிளையாள் நல்லதங்காள்
ஏழுபிள்ளை நலலதங்கா ளென்வீடுவந்தவிடத்தில்

பசித்தமுகம்பார்த்து பாலடைக்குப்பால்வாராததால்
களைத்தமுகம்பார்த்துக் கரண்டிப்பால்வாராததால்
என் தங்கைநல்லதங்கா ளேந்திழையுங்கோபமாகி
கோபம்பொறுக்காமல் கொம்பனையுந்தானடந்து [லே
பிள்ளைகளுந்தானுமாகப் போய்குதித்தாள்பொய்கையி
மக்களுந்தானுமாக மாண்டாரேபெருந்துறவில்
அப்படிசெய்ததொரு அரும்பாவியென்மனையாள்
என்மனையாள்சேனைகட்கு இடிபந்தல்போடுமென்றான்
கற்பந்தல்போட்டுக் கவிழ்த்துவிடும்சேனைகளை
அந்தவுரைகேட்டு அழகுள்ளதச்சரெல்லாம்
அரும்பாவிசேனைகட்கு அழகுபந்தல்செப்பனிட்டார்
பெரும்பாவிசேனைகட்கு பலத்தகல்லாற்பந்தலிட்டார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கு
ஆணழகன் நல்லதம்பி அனர்த்தம்வரப்பந்தலிட்டான்
சூத்திரப்பந்தல் சுழல்பந்தல் தானுமிட்டான்
கல்லாலேபந்தலது கலகம்வரத்தானுமிட்டான்
தன்னுடையசேனைகட்குத் தென்னோலைபந்தலிட்டான்
பந்தலிட்டபிற்பாடு பார்மன்னனேதுரைப்பான்
மன்னவன் நல்லதம்பி மர்மமாயேதுரைப்பான்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
படுபாவிநாயகிக்குப் பட்சமாயேதுரைப்பான்
உங்கள்மனிதருக்கு உகந்துநீபாக்கனுப்பு
எங்கள்மனிதருக்கு யான்பாக்கனுப்புகிறேன் [தான்
என்றுரைத்துநல்லதம்பி எல்லோர்க்கும்பாக்குவைத்
கப்பல்கடந்து கடலேறிப்பாக்குவைத்தான்
வற்றிக்கிடந்ததொரு வாகானகாவேரி
காவேரிநிரம்பியங்கே கரைபுரண்டுவந்ததுபோல்
பூரித்திருதோளும் பொனனுபரணமின்ன [ன்
மாட்டின்மேல்பாக்குமங்கே மனிதருக்குப்போகவிட்டா
சின்னமடிகோலி சீமையெங்கும்பாக்குவைத்தான்
பெரியமடிகோலி பூமியெங்கும்பாக்குவைத்தான் [ன்
கலியாணமென்றுசொல்லிக் கடலேறிப்பாக்குவைத்தா
இப்படியாகப்பாக்கு இன்பமாய்வைத்தபின்பு
தன்னுடையசேனைகட்குத் தாம்பூலம்வைத்தபின்பு
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
ஜாதிஜனங்களுக்குத் தனிப்பாக்குத்தானளித்தாள்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி

## நல்லதம்பி ஓலையெழுதி அனுப்புதல்

ஆனலழகுமன்னன அறிவுள்ள நல்லதம்பி
என்னவென்றுசொல்லி எழுதுவானேலைதன்னே
என்பிள்ளை தம்பியர்க்கு இயலாகவிப்போது
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
வெள்ளிக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பகல்முகூர்த்தமென்றுசொல்லிப் பாங்கானஓலையிலே
மூளியலங்காரி மூதேவிசேனேயெல்லாம்
அனைவருந்தாமறிய அவ்வோலைஎழுதினனே
கலியாணவோலைதன்னைக் கடுகவேஎழுதினனே [ன்
அப்போது-மன்னவன் நல்லதம்பி மர்மமாயெழுதுகிற
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
என்தங்கைநல்லதங்காள இளங்கொடியாள்நாயகியும்
கூடப்பிறந்த குலப்பெண்ணுமென்தங்கை
தங்கையும்பெற்றெடுத்த தனஞ்செயர்களேழுபேரும்
பங்குனிமாதத்திலே பதின்மூன்றுந்தேதியிலே
வியாழக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பாழுங்கிணறதனில் பத்தினியும்பிள்ளைகளும்
விழுந்துஇறந்தார்கள் விதியினிடகாரணத்தால்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுந்தம்சேர்ந்தார்கள்
அரும்பாவிதன்னாலே ஆனபாதஞ்சேர்ந்தார்கள்
கொடும்பாவிதன்னாலே கொம்பனையுந்தானிறந்தாள்
மாண்டுமடிந்தசேதி வையகத்தார்தாமறிய
செத்துமடிந்தசேதி சீமையுள்ளோர்தாமறிய
ஓலையெழுதினனே உத்தமசிகாமணியும்
மாண்டுமடிந்தாளென்று மன்னனேலைஎழுதினனே
ஓலையெழுதியல்லோ உகந்தகுறியுமிட்டு
இறந்தவோலைதானெழுதி இருபக்கம்சுட்டெரித்து
இருவோலைதன்னையு மிசைவாகத்தானெடுத்து
தூதுவனைத்தானழைத்து சுருக்காயெடுத்துரைப்பான்
ஓலைச்சுருள்கொடுத்து உத்தமனுமேதுசொல்வான்
மூளியலங்காரி மூதேவிசேனைகட்கு
கலியாணவோலைதன்னைக் கடுகவேகொண்டுசெல்லும்
என்றுமேநல்லதம்பி இன்பமாய்த்தான்கொடுத்து
கலியாணவோலைதன்னைக் கையிற்கொடுத்தபின்பு
தூதுவரானவர்க்குச் சுருக்காயெடுத்துரைப்பான்

எந்தன துசேனேகட்குஇறந்தவோலேகொண்டுசெல்லும்
என்றுமேநல்லதம்பி இசைவாகத்தான்கொடுத்தான்
கொடுத்ததைத்தாம்வாங்கி கொப்பெனவேதாம்நடந்து
அரசன்சொல்கடவாமல் அப்பொழுதேபோகலுற்ருர்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கும்
நல்லதம்பிதன்னுடைய நலமுள்ளபந்துகட்கும்
ஓலேயைத்தாம்கொடுத்து உத்தமரும்வந்துவிட்டார்
இப்படியாக இருக்கின்றவேளேயிலே
இருதிறத்துசேனேகளும் இங்கேபயணம்வாருர்
மூளியலங்காரி மூதேவிசேனேயர்கள்
வருகிறசந்தோஷம் மட்டுமிதங்களில்லே
பார்க்கமுடியாது பாரிலிடங்கொள்ளாது
காணமுடியாது கட்டுரைக்கலாகாது
அவரவர்கள்-தங்கக்கிரீடமும் தார்வேந்தர்தன்னழகும்
முத்துக்கிரீடமும் முடிமன்னர்சீரழகும்
பவளக்கிரீடமும் பார்மன்னர்தோளழகும்
உத்தரீயந்தான்புரள உத்தமர்கள்வாராரே
தேரேறிமன்னரெல்லாம் தெருவீதிவாராரே
ஆனேயேறிமன்னரெல்லாம் அசைந்துமேவாராரே
கொண்டைமுடியுடனே கொண்டைதாங்கிப்பூவுடனே
அவர்களதுதேவிகளும் அநேகம்பேர்தாதிகளும்
மஞ்சள்குளிப்புடனே மையுடனேபொட்டுடனே
பாங்கிமாரெல்லோரும் பல்லக்குத்தாங்கிவர
வந்துநிறைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
பந்தியாயுட்கார்ந்தார் பந்தலிடங்கொள்ளாமல்
இவளுடையசேனேகள் இப்படியாயிருக்க
ஆணழகன் நல்லதம்பி அவனுடையசேனேகளும்
இவனுடையமனிதருக்கு இறந்தவோலேவந்தபின்பு
ஓலேச்சுருள்படிக்க உடன்பிரித்துப்பார்த்தார்கள்
நாமக்கருங்குழலாள் நல்லதங்காள்மாண்டாளென்று
நாமமுடியழகன் நல்லதம்பிராசாவின்
சேனேகளத்தனேயுஞ் சேர்ந்துமிகவழுதார்
முட்டியழுதார்கள் முகத்திலறைந்துகொண்டு
அவரவர்கட்கக்கையா லடித்துக்கொண்டுதாமழுதார்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதார்
தாய்வீட்டுச்சேனேயெல்லாம் தலேவிரித்துத்தாமழுதார்
போய்ப்பார்ப்போமென்று புண்ணியர்கள்வாரார்கள்

கண்டுவருவோமென்று காரிழைமார்வாரார்கள்
வாடிமுகந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
இளைப்புங்களைப்புமாக எல்லோரும்வாரார்கள்
அலைகுலையத்தலைகுலைய அனைவோரும்வாரார்கள்
வந்துமேஉள் நுழைந்தார் வாசலிடங்கொள்ளாமல்
நேர்த்தியாயமைந்திருக்கும் சூத்திரப்பந்தலின்கீழ்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்துநிறைந்தார்கள்

## சூத்திரப்பந்தலின்கீழ் பிள்ளை தாலிதரித்தல்

இப்படியாக இருக்கின்றவேளையிலே
நல்லதம்பிபெற்றெடுத்த நாமமுடியானை
சியக்காய்நெல்லி சிறுபயறுகஸ்தூரி
வாசனைவர்க்கமுடன் வகைவகையாய்க்கொண்டுவந்து
மணவறையின்மேலாக மாப்பிள்ளையைக்குந்தவைத்து
மாப்பிள்ளைபெண்ணுக்கு மணவறையில்நலங்குமிட்டார்
சீக்கைக்கழித்தார்கள் சீராய்இருவருக்கும்
ஸ்நானங்கள்செய்துவைத்தார் தாமமுடியார்கள்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுகாப்புமிட்டு
மாப்பிள்ளையைக்கொண்டுவந்து மன்னரலங்கரித்தார்
அநேகவிதபூஷணத்தா லலங்கரித்தானபின்பு
பொற்கொடிமாரெல்லோரும் பெண்ணையலங்கரித்தார்
இருவரையுங்கொண்டுவந்து இன்பமுள்ளபந்தலிலே
மணவறையின்முன்பாக மன்னவனைக்குந்தவைத்து
அரசாணிமுன்பாக ஆளனைக்குந்தவைத்து
மூன்றுறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலி கழுத்திலேயென்றுரைத்தார்
அப்போதுஆணழக னப்படியேகட்டலுற்றான்
என்னவென்றுசொல்லி எடுத்தவன்கட்டலுற்றான்
சிவசிவாவென்றுசொல்லி திருக்கழுத்தில்கட்டினான்
அரகராவென்றுசொல்லி அழுத்தினான்மங்கிலியம்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானபிற்பாடு
அங்கிருந்தமன்னரெல்லாம் அழகுபட்டங்கட்டினார்கள்
அம்மான்மாரெல்லோரும் அடங்கலும்பட்டமிட்டார்

நல்லதம்பிபெற்றெடுத்த நவமணியுமேதுரைப்பான்
என்-ஐயாவேஐயாவே அடியேனொருவார்த்தை
உம்முடன்தான்பிறந்த உத்தமியாள் நல்லதங்காள்
அவளுமொருசீமை ஆளுகிறாளென்றீரே
அவள்பேரைச்சொல்லி அவள்பட்டம்கட்டுமென்றான்
அத்தைபேரைச்சொல்லி யணியவேவேண்டுமென்றான்
அத்தையின்பேருரைக்க ஆணழகன்வயிறெரிந்து
பொன்னின்குடமேஎன் பூபாலராஜாவே
அத்தையைக்கொன்றவள்தா னரும்பாவியுன்தாயார்
மாமியைக்கொன்றவள்தான் மாபாவியுன்தாயார்
என்று-அதிகவயிறெரிந்து அப்போது நல்லதம்பி
வாளையுருவி மன்னவனுந்தானெழுந்தான்
தகப்பனுடகோபத்தை தார்வேந்தன்தான்பார்த்து
அண்ணாவே அண்ணாவே அதிககோபங்கொள்ளாதீர்
கலியாணவாசலிலே கலக்கங்கள்வையாதீர்
இங்குவைத்தசூத்திரங்க ளெனக்குந்தெரியவரும்
அதற்குமேல்சூத்திரங்க ளறிவேன்காணென்தகப்பா
இன்னமொருநாழிகையி லிங்கேதெரியுதுபார்
மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அவளுடையசேனையெல்லாம் அதமாகப்போகுதுபார்
மாதாவின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
அரும்பாவிசேனையெல்லாம் அடியோடேமாளுதுபார்
மாபாவிசேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்
பதராதேபதராதே பட்சமுள்ளஎன்தகப்பா [ன்
பொறும்பொறுமென்றுபொன்னடிக்குதெண்டனிட்டா
அப்போது-ஆறினான்கோபம் அமர்ந்தான்கொலுதனி
கலியாணச்சடங்குகள் கடுகமுடிந்தவுடன் [லே
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
மன்னவன்நல்லதம்பி மர்மமாயெடுத்துரைப்பான்
உங்கள்மனிதருக்கு உண்ணவே நீபடைப்பாய்
எங்கள்மனிதருக்கு யான்படைப்பேன்சாதங்கறி
தன்கணவன்சொன்னபடி சம்மதித்தாள்மூதேவி
அப்போதுபந்திகளை அமர்த்தினார்பந்தலிலே
மூதேவிசேனைகள் மூடிமன்னரத்தனையும்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்திருந்தாரெல்லோரும்
நல்லதம்பிசேனையெல்லாம் நலமானபந்தலிலே
பக்கங்கொலுவிருந்து பத்தியமர்ந்தார்கள்

வரிசைவரிசையாக வந்தவர்க்குஇலைபோட்டார்
வாழையிலைபோட்டு வட்டித்தார்சாதங்கறி
இவளுடையசேனைகட்கு இவள்பரிமாறிவாராள்
நல்லதம்பிசேனைகட்கு நங்கையவளேதுசெய்தாள்
வஞ்சனையாகவல்லோ வட்டித்துவாராளே
வரகரிசிச்சாதமது வட்டித்தாளப்போது
அகத்திக்கீரைகுழம்புதன்னை அள்ளியவள்வார்த்து
வஞ்சனைசெய்துமவள் வாராளலங்காரி
தங்களிடசேனைகட்குத் தகுந்தபடியேதுசெய்தாள்
குத்துப்பருப்புமிட்டாள் கூசாமல்நெய்சொரிந்தாள்
அள்ளிப்பருப்புமிட்டா ளதுகொண்டநெய்சொரிந்தா
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும் [ள்
எட்டுவிதக்கறியும் இயலானபச்சடியும்
சுற்றிக்கறியும்வைத்து செம்புதயிர்முன்னேவைத்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசாணைசெய்திருந்தா
நல்லதம்பிசேனைகட்கு நடக்குதுயிந்தவிதம் [ள்
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தன்னுடையசேனைகட்குத் தான்பரிமாறிவாராள்
பாவையுடசேனையெல்லாம் பந்தியமர்ந்தார்கள்
அந்தநல்லவேளையிலே அங்கிருந்தசேனையர்கள்
ஆகாததுர்க்குறிகள் அசுஷணமேகண்டார்கள்
இருக்கின்றமன்னருக்கு இடதுதோள்துடித்திடுமாம்
வந்திருந்தமங்கையருக்கு வலக்கண் துடித்திடுமாம்
வைத்திருந்தசாதங்கறி ரத்தக்கவுலடிக்கும்
உற்றபதார்த்தவகை உதிரக்கவுலடிக்கும் [ர்
அங்கிருந்தசேனையெல்லாம் அவர்களுமேதுசொல்வா
அப்போதுசேனையர்க ளடங்கலுமேதுசொல்வார்
என்னமோயேதோ இடிவந்துநேர்ந்திடுமோ
மாளாப்பழிநமக்கு மீளாமல்வந்திடுமோ
தீராப்பழிநமக்குச் சேரவேவந்திடுமோ
என்றுசொல்லிமன்னவர்க ளேங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்ம்மறந்து
என்னமோயேதோவென்று இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதம்பிசேனைகட்கு நன்றாய்ப்படைத்துவாராள்
அகத்திக்கீரைகுழம்பு அடைவாகத்தான்வார்த்தாள்
உண்ணுங்களென்றுசொல்லி உபசாணைசெய்துவாராள்

சாத்தும்வேரை நல்ல தம்பிசேனை உண்ணுகிறார்
மூளியுடசேனையெல்லாம் முப்பழமுஞ்சோறுமாக
முன்சோறு உண்டுமல்லோ பின்சோறெடுக்கும்போது

நல்லதம்பி ஆசாரியரைக்கண்டு மூளியலங்காரி சேனையின்பேரில் சுழற்பந்தலைத்தட்டி மடியவைத்தல்

அப்போது நல்லதம்பி ஆசாரிக்கெடுத்துரைப்பான்
அண்ணாடா அண்ணாடா ஆசாரி அண்ணாடா
ஆர்காணுமாசாரி அறியவொருவார்த்தை
மூளியுடசேனையெல்லாம் முழுதும்மடிவதற்கு
அவதானப்பந்தலை நீ அடுக்காகத்தட்டிவிடு
போய் நீதட்டிவிடு புத்தியுள்ள ஆசாரி
பந்தலின்சூத்திரத்தைப் பார்த்துவிடு ஆசாரி
என்று சொல்லநல்லதம்பி எடுத்துவிட்டானாசாரி
தந்திரமாய்ப்பந்தலையும் தட்டிவிட்டானாசாரி
அவதானப்பந்தலை அங்கேதட்டிவிட்டானே
மூளியுடசேனையெல்லாம் முறிந்துமடியுதங்கே
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மூதேவிசண்டாளி மூலையிலேபோய்ச்சேர்ந்தாள் [தாள்
கையைமுறித்துக்கொண்டு கதவண்டைபோய்ச்சேர்ந்
என்னசெய்யப்போறேனென்று ஏங்கியழுகலுற்றாள்
ஒற்றைக்குரலிட்டு ஓங்கியழுகலுற்றாள்
மாபாவிசீமையிலே மன்னர்களைத்தோற்றுவிட்டேன்
பெரும்பாவிசீமையிலே பெண்டுகளைத்தோற்றுவிட்டே
ஒருகோடிகும்பிழந்து ஒற்றைக்காலாகிவிட்டேன் [ன்
இருகோடிகுப்பிழந்து இருந்தேனொருபாவி
சூதுசெய்துகொன்றானே துரோகியவனென்கணவன்
கல்லாலேபந்தலிட்டுக் காளைகளைக்கொன்றுவிட்டான்
ஒருத்திவந்துள் நுழைந்து ஒருகோடிகும்பிழந்தேன்
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நின்றுபுலம்புகையில் கண்டானேராஜமன்னன்
ஆணழகன் நல்லதம்பி அலங்காரிக்கெடுத்துரைப்பான்
பத்துபேரைக்கொன்ற பழிகாரிக்கெடுத்துரைப்பான்
எட்டுபேரைக்கொன்ற இழிகுலத்திவாடியென்று
என்னென்னபங்கம் இளங்கொடிக்குச்செய்யலுற்றான்
முன்சிகையைத்தான்பிடித்து நல்லமணப்பந்தலிலே
மூக்குஸ்தனமறுத்தான் முத்துமுடிப்பந்தலிலே

கொண்டையறுத்து கொத்தோடே தொங்கவிட்டான்
காதையறுத்தானங்கே கழுத்திலே தொங்கவிட்டான்
கண்ணைப்பிடுங்கியங்கே எண்ணெயையூற்றிவைத்தான்
இன்னமும் நல்லதம்பி ஏதேதுசெய்யலுற்றான்
கழுதையைக்கொண்டுவந்து கட்டழகிமூளியை
கழுத்திலெருக்கமாலை கனமாகச்சூட்டிவிட்டான் [ன்
கழுதைமேலேற்றிவைத்து கைகொட்டிக்தானகைத்தா
சேவகரைத்தானழைத்து தெருவிலிழுங்களென்றான
கழுதையைக்கைபிடித்துக் கடுகவிழுங்களென்றான்
அழகுள்ளவீதியெல்லாம் அங்கங்கேசுற்றுமென்றான்
நாலுதெருவிலே நாரியவள்கோலம்வந்தாள்
மூன்றுதெருவிலே மூதேவிகோலம்வந்தாள்
நாலுகோலம்வந்தபின்பு நல்லதம்பியேதுசெய்தான்
மூளியலங்காரி மூதேவிதோஷியை
சுண்ணாம்புகால்வாயில் சுட்டானேசுந்தரியை
சுட்டானேசுந்தரியைச் சுகமான நல்லதம்பி
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மனையாளைச்சுட்டெரித்த மற்றுநாள்காசிராஜன்
மச்சான்வரவை மன்னவனுப்பாத்திருந்தான்
நல்லதங்காள் நாயகனும் நற்காலந்தான்பிறந்து
காசிராஜனுக்குக் காலந்தெளிந்ததங்கே
காலமதுதெளிந்து கனத்தமழைபொழிந்து
சீமையதுதெளிந்து செழித்துமழைபொழிந்து
மூப்போகந்தான்விளைந்து முயற்சியுள்ளசீமையிலே
காலந்தெளிந்தது கப்புவிளைந்தது
சீமைசெழித்தது செல்வமழைபெயதது
நாடுசெழித்தது நல்லமழைபெய்தது
கருப்புதெளிந்தபின்பு காசிராஜனேதுசெய்தான்
தாய்வீடுபோனபெண்ணைத்தானழைக்கவேணுமென்று
நல்லதங்காள் நாயகியை நாயகனழைக்கவென்று
செட்டிகடைக்குவந்தான் சேலைவிலைமதித்தான்
பார்ப்பான்கடைக்குவந்தான் பட்டாடைவிலைமதித்தா
பாரியாளேறிவரப் பல்லக்குகொண்டுவாரான் [ன்
புத்திரர்களேறிவரப் பொன்காடிகொண்டுவாரான்
பலபலகனிவகைகள் பாலருக்குக்கொண்டுவாரான் [ன்
சிற்றுடையுடன்மன்னன் சிறுசதங்கைகொண்டுவாரா
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவாரானே

குதிரைப்பரிவாரம் கோடிதளம்முன்னடக்க
ஆனைப்பரிவாரம் அடங்கலும்பின்னடக்க
கவிஞர்கவிபாடக் கட்டியங்கள்கூறிவர
ஆனையுஞ்சேனையும் அத்தனையும்முன்னடக்க
எக்காளந்தானூத இடிபாணந்தான்முழங்க
நாகசுரமூத நவிலைநற்கொம்பூத
பேரிகைகொட்டிவரப் பெரியசின்னமூதிவர
கத்திகட்டும்சேவகரும் காவலரும்முன்னடக்க
வந்துநிறைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
நல்லதம்பிக்குக்காசி நாடனெடுத்துரைப்பான் [றான்
மைத்துனனே மைத்துனனே மயிலொட்டியெங்கேயென்
எலுமிச்சம்வர்ணமான இளங்கொடியாளெங்கேயென்
பவளநிறமுடைய பத்தினியாளெங்கேயென்றான் [றான்
என்றகாசிராஜனுக்கு எடுத்துரைப்பான் நல்லதம்பி
அருந்தங்கைசெத்துமச்சான் அநேகநாளாச்சுதப்பா
அப்போதுகாசிராஜன் அடைவாக எதுசொல்வான்
பெண்சாதிபோனாறபோனாள் பிள்ளைகளெங்கேயப்பா
அப்போது நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
சேயர்களிறந்துபோய் சேனநாளாச்சுதப்பா
அப்போதுமன்னவன் மைத்துனனுக்கேதுசொல்வா
ஒன்றிரண்டுமாண்டாலும் உலகத்திலுள்ளபடி [ன்
ஏழுபிள்ளைமாண்டவிதம் எனக்கறியச்சொல்லுமென்று
அந்தவுரைகேட்டு ஆணழகன் நல்லதம்பி [ன்
மாமமொழியாமல் மைத்துனனுக்கேதுசொல்வான்
வந்தாளே நல்லதங்காள் மக்களுந்தானுமாக
காட்டிலேகண்டுநான் வீட்டுக்குப்போங்களென்றேன்
எந்தனுரைப்படியே இளங்கொடியாள்வீடுவந்தாள்
புத்திரரும்தானுமாகப் பொற்கொடியாள் வந்தாளென்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி [று
செய்தகொடுமையாலே செல்வவதிபிள்ளைகளும்
கோபம்பொறுக்காமல் குதித்தார்கள்பொய்கையிலே
அந்தவிஷயம அறிந்துநானோடிவந்து
மாண்டவரைத்தானெடுத்து மயானச்சுடலையிலே
சுட்டுவிட்டுக்கருமமும் சுகமாகச்செய்துவிட்டேன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தங்கைபழிக்காகத தகுந்தபழிவாங்கிவிட்டேன்
மக்கள்பழிக்காக மனையாளைக்கொன்றுவிட்டேன்

நான்-இறந்துமடியாமல் இருந்தேனுனக்காக
என்றவுரைகேட்டு ஏங்கிமனந்தளர்ந்து
பிள்ளைக்குக்காக்ஷியாய் பெண்கொண்டுவாராமல்
கலியாணம்செய்துநான் கண்குளிரப்பாராமல்
செல்வரைப்பார்க்கிலும்நான் சீமையாளப்போறேனோ
மைந்தரைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமேகாசிராஜன் இனியில்லாதுக்கமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
அப்போதுநல்லதம்பி அதிகவிசனமுடன்
தங்கையரைபார்க்கிலும்நான் தரணியாளப்போறேனோ
மைத்துனனைப்பார்க்கிலும் நான்மண்டலமாளுவேனோ
என்றுமவன் நல்லதம்பி இனியாருக்கோபமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
இவ்விதமாக இவர்கள்மடிந்திருக்க

நல்லதங்காள் நல்லதம்பி காசிராஜன் ஏழுபிள்ளைகள்
இறந்திருப்பதைக்கண்டு பார்வதி பரமசிவன்
வந்து எழுப்புதல்

பார்வதிதேவிக்குப் பார்க்கமுடிபோகவில்லை
பரமசிவனுக்குப் பார்க்கமுடிபோகவில்லை
ஈஸ்வரனும்ஈஸ்வரியும் இரக்கமுடன்தாமெழுந்து
ரிஷபவாகனமேறி இன்பமுடனப்போது
கைலாசம்விட்டுமவர் கடுகப்பயணமதாய்
கப்பரையில்தண்ணீர்கொண்டு கையில்பிரம்புகொண்டு
கையில்பிரம்பெடுத்துக் கப்பரையில்ஜலமெடுத்து
செத்தவர்கள் தம்மேலே சீராய்த்தெளிப்பதற்கு
பார்வதிதேவியும் பரமசிவனாரும்
கைலாசம்விட்டல்லவோ கடுகவழிதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இருவரும்வந்தார்கள்
பாழுங்கிணற்றருகே பரமசிவன்வந்துநின்று
இருண்டகிணற்றருகே ஈஸ்வரியும்வந்துநின்று
ஏழுபிள்ளை நல்லதங்காள் எரிந்திருக்கும்சாம்பல்மேல்
தண்ணீரைத்தான்தெளித்துத் தட்டியெழுப்பினார்கள்
அப்போ- தூங்கிஎழுநதவர்போல்சுகமாயெழுந்தார்கள்
ஏழுபிள்ளை நல்லதங்காளெழுந்துமேதானும்வந்தாள்
மச்சானும்மச்சானும் அச்சமில்லாதெழுந்தார்கள்

எழுபிள்ளைதாமுமப்போ எழுந்திருந்துவந்தார்கள்
அப்போது நல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
அரகராமாதேவா அந்திவண்ணபரசுபாணி
எள்ளுக்குள் நிறைந்து நின்ற ஏகபரஞ்சுடரே
என்தாயேபார்வதியே எனையாளவந்தவளே
எங்களை எழுப்பிவைத்த ஏகபராபரியே
உங்கள் தரிசனங்கண் டுள்ளமெல்லாம்பூரித்தோம்
எங்களுக்குக்காட்சிதர இன்பமுடன் வந்தீர்கள்
சரணமசரணமென்று சாஷ்டாங்கமாய்ப்பணிய
ஐயனரனும் அம்மனும்போய்மறைந்தார்
இப்படியாயிருக்க இளங்கொடியாளேது சொல்வாள்
பர்த்தாவேபர்த்தாவே பாராளும்பர்த்தாவே [னே
உமது-பேச்சைநான்கேளாமல் பிழைமோசம்போனே
வார்த்தைநான்கேளாமல் வகைமோசம்போனேனே
பெண்புத்தியாலல்லோ பிழைமோசம்வந்ததென்றாள்
தப்பாமல்வானம்பர்த்தா தலையிலிடித்ததங்கே
பேய்கொண்டபாவியைநான் பிறப்பெனநம்பிவந்தேன்
சண்டாள அண்ணனைநான் சதமென்றுநம்பிவந்தேன்
என்-ஆசைக்கணவா நீர் அன்பானவார்த்தைகேளும்
என்னைப்போல்பெண்சாதி இவ்வுலகிற்கிட்டாளோ
வேசிகிடையாளோ வெள்ளாட்டிகிடையாளோ
தாசிகிடையாளோ தகுமொருத்தியாகாளோ
நாட்டியப்பெண்களிலே நல்லபெண்கிடையாளோ
மனையாட்டிமாண்டாளென்று மாளவிதியுமக்கேன்
பெண்சாதிமாண்டாளென்று பின்னேமடியலாமோ
எனக்காக நீர்மாண்டால் ஏசாதோயிவ்வுலகம் [வார்
நீர்-மாண்டுமடிந்தாக்கால் மண்டலத்தாரென்னசொல்
செத்துமடிந்தாக்கால் சீமையுள்ளாரென்னசொல்வார்
எனைக்காக உம்முயிரை ஏன்மாய்க்கவந்தீரிப்போ
என்றுமேகணவனுக்கு இயல்பாகத்தானுரைத்தாள்
அண்ணாவே அண்ணாவே அண்ணியுடவார்த்தை
கேட்டீரோ அண்ணாவே கிளிமொழியாள் தன்வார்த்தை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அவளுடையவார்த்தைகளை அறியவே நீர்கேளும்
நான்வருமசேதிதன்னை நாயகியாள் தானகேட்டு
ஓடிக்கதவடைத்து ஓட்டிச்சுவர்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்துச் சரியாகமண்ணறைந்தாள்

பண்ணுதபாடெல்லாம் பாவிபடுத்திவைத்தாள்
அண்ணாவே அண்ணாவே ஆரணங்கையிப்போது [ச
ஆக்கினைசெய்யவேண்டாம் ஆழியில்வைக்கவேண்ட
இவளை-கல்லிலெழுதவேணும்கண்காண நாட்டவேண்
காரியுமிழவேணும் கண்டார்சிரிக்கவேணும் [டும்
என்றுமே நல்லதங்கா ளியலாகத்தானுரைக்க
அப்போது நல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
எந்தன்பிறப்பே நீ இளங்கொடியே நல்லதங்கா
திக்கற்றபாவியைப்போல் தெருவிலுருண்டாயம்மா
தாயற்றபாவியைப்போல் தரையிலுருண்டாயம்மா
இப்போ-நானாண்டசீமையெல்லாம் நீயாளவேணுமம்
நீயாண்டசீமையெல்லாம் நானாளவேணுமம்மா [மா
என்றுமே நல்லதம்பி இன்பமாய்ச்சொல்லுகையில்
அந்தமொழிகேட்டு ஆரணங்கேதுரைப்பாள்
அண்ணாவே அண்ணாவே அழகுசிகாமணியே
செத்தோரிருந்தோமானால் சீமைக்கு ஆகாது
இப்போ-மூளியலங்காரி மூதேவிநாயகியை
பூமியில்வைக்கவேணும் போகிறவர்பார்க்கவேணும்
கல்லிலெழுதவேணும கடுகவே நாட்டவேணும்
காரியுமிழவேணும் கண்டார்நகைக்கவேணும
என்றுமேதான்சொல்லி இன்பமாய்நல்லதங்காள் [ள்
அண்ணனைத்தான்பார்த்து அரிவையெடுத்துரைப்பா
என்-அண்ணாவே அண்ணாவே அன்பாக நீர்கேளும்
ஆசாரிதன்னை நீர் அதிகவிரைவுடனே
அழைத்தோடிவாருமென் றரிவையெடுத்துரைத்தாள்
அப்போது நல்லதம்பி அதிகதுரிதமுடன்
ஆசாரிதன்னை அவனழைத்தோடிவந்தான்
ஆசாரிதன்னைப்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
பட்டணத்திற்கீர்த்தியுள்ள பரங்கிரியாசாரி
எனக்கு-காசினியில்கோயிலொன்று கட்டிவையுமாசாரி
மாதமொருதிருநாள் மகிழ்ச்சியாய்த்தானடத்தும்
வருஷமொருதேரு வரிசையாய்த்தானடத்தும்
என்றுசொல்லி நல்லதங்காளேந்திழையுமப்போது
நலலதங்காளேழுபிள்ளை நாட்டில்வன்னிமரமாகி
வன்னிமரக்கன்றாகி மாசின்றி நின்றார்கள்
நினைத்தவரமளித்து நீணிலத்தில்வாழ்ந்திருக்க
மச்சானும்மச்சானும்மங்கைநல்லதங்காளை

ண்டுமகிழ்ந்திருவர் கைலாயம்சேர்ந்தார்கள்
சடையிற்பிறையணிந்த சங்கரனார் தம்மருளால்
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும் ஆரியரும்
நாரியருளங்களிக்க நல்லதங்காள் தன்கதையை
அஷ்டதிசைபுகழ அச்சிலிதைத்தானியற்ற
கற்றோரும்மற்றோரும் களிப்பாய்ப்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
தெய்வமகள்விலாச அச்சுக்கூடத்ததிபரும்
நலமாகப்பதிப்பித்தார் யாவருக்குந்தா னுதவ
சிந்தனைகளில்லாமல் சிறப்பாகப்படித்தவர்கள்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
பால்போல்ருசிக்கப் பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போல்சுற்றம் மூசியாமல்தான்வாழி
ஓங்கிநால்வேத முயிர்பலவுந்தாபவாழி
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்.

நல்லதங்காள் கதை முற்றிற்று.

---


## தெய்வமகள் பதிப்பு

### மூலமந்திர யந்திரங்கள் அடங்கிய
### மலையாள பகவதி மாந்திரீக சித்தன்

[யோக சித்தாந்த மகான் சுவாமி வடிவேல் எழுதியது]

இதன் விலை ரூபா 1 0 0

இதில் விநாயகர் லக்ஷ்மி இராஜராஜேஸ்வரி முதலிய பதினொரு தேவதா வசியங்களும், அதற்குத்தக்க பதினொரு மந்திர யந்திரங்களும், எட்டுவித பஞ்சாக்ஷர அஷ்டமாசித்தின் மந்திர யந்திரங்களும், ஆறுவித சடாக்ஷர அஷ்டகன்ம மந்திர யந்திரங்களும், பத்துவித முனி பேய் பிசாசுதோஷம் நோய் தீர்க்கும் மந்திர யந்திரங்களும், மெஸ்மெரிஸ மென்னும் மனோவசியத்தால் நடத்தும் தாரனை, தூங்கவைத்தல், களவுதெரிதல், நோய்தீர்த்தல், இஷ்டார்த்தசித்தி வசியம் முதலிய நான்கு உச்சாடன விளக்கப் படங்களும், இன்னும் வர்த்தக உத்தியோக வழக்கு சத்துரு வசியங்களும், தனது சொந்த அனுபவமாக கையாண்டு வருவதையே உலக பரோபகாரமாக வெளியிட்டிருக்கிறது. இந்நூலைக் கையாளும் எந்த ஒருவரையும் கலியுகசித்தனென்றே வர்ணிக்கப்படுவார்கள். மாந்திரீக சித்தனென்றால் மற்றும் சொல்லவேண்டுமா?

---

கிடைக்குமிடம்:—சரஸ்வதி புத்தகசாலை,
175, செட்டியார் தெரு, கொழும்பு.

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!

மாந்திரீகர்களுக்கு ஓர் அரிய பொக்கிஷம்

கருவூரார் மாந்திரீக

# அட்டமாசித்து

வசியம், மோகனம், தம்பனம், உச்சாடனம், ஆக்ருஷ்ணம், வித்துவேஷணம், பேதனம், மாரண முதலிய மூலமந்திரங்களும், தனித்தனி விநாயகர் பூஜை, சுப்பிரமணியர் பூஜை, வாலைபூஜை, வயிரவர் பூஜை, ஆஞ்சநேயர் பூஜை, தூமாவராகி பூஜை, மாடன் பூஜை முதலியனவுஞ் சேர்த்து அச்சிட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0 12 0

---

## புலிப்பாணி வைத்தியம் - 500

போகர் மாணுக்கரிலொருவரான புலிப்பாணிமுனிவர் பாடிய வைத்தியம்-500 என்னும் புத்தகத்தை தக்க வைத்தியர்களைக்கொண்டு சுத்தமாகப் பிழையின்றி அச்சிட்டு இருகலரில் முனிவரின் திருவுருவப்படம் ராபர் பயிண்டு செய்தது. இதன் விலை ரூபா 1.

---

## ஸ்ரீ பகவத்கீதை வசனம் கிளேஸ்

விலை ரூபா 5 . 0 0

ஸகலலோகரக்ஷகனான திருமால் தானே கிருஷ்ணனாக திருவவதாரஞ்செய்த காலத்தில் "தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று சொல்லுகிறபடி அருச்சுனனை வியாஜமாகக்கொண்டு இம்மாநிலத்து மாந்தர்கள் அனைவரும் மகிழ்ந்துஉய்யுமாறு வேதாந்தத்தின் ஸாரமாகிய இக்கீதாசாத்திரத்தை பரமகிருபையால் உபதேசித்திருக்கிறார். இக்கீதாசாத்திரத்திற்கு வடமொழியில் அநேகம் இருக்கிறது என்று யாவரும் அறிந்த விஷயமே. வடமொழியில் இருப்பதைச் சுத்தமாகத் தமிழ் வசனநடையில் ஸ்ரீ சங்கர பாஷியத்தைத் தழுவி சென்னை கிறித்தவ கலாசாலை மாஜி தமிழ்ப் பண்டிதர் T. ட. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டு அழகிய இரண்டு படங்களும் சேர்த்து கடைசியில் தத்வ நாமங்களும் சேர்த்துள்ளன. ஆகையால் ஒவ்வொருவரும் தெய்வமகள் விலாச அச்சகத்தில் அச்சிட்டதா என்று பார்த்து வாங்கக் கோருகிறேன். சொற்ப பிரதிகளே இருப்பதால் வேண்டுவோர் முந்திக்கொள்ளுங்கள்.

ரப்பு விலை ரூபா 3.

---

## சோதிட பிரஞ்ஞான தீபிகை

இதன் விலை ரூபா 4 0 0

இந்நூலானது லக்னமுதல் 12-பாவங்களுமுள்ள பலன்களைச் சோதிஷம் அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் எளிதில் விளக்கிக்காட்டக்கூடிய ஒரு வசன நூலாக இருக்கிறது. இந்நூல் ஒவ்வொரு மனிதரிடத்திலுமிருந்தால் அவரவர் வாழ்வு நாட்களில் வரும் நன்மை தீமைகளைச் சுலபமாய்ச் சோதிடர்கள் உதவியில்லாமலே அறிந்துகொள்ளலாம்.

---

கிடைக்குமிடம்:—

**சரஸ்வதி புத்தகசாலை**

175, செட்டியார் தெரு, கொழும்பு.

JAN 1958